1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

76-ம் புத்தகம் 14-ம் இல. யாழ்ப்பாணம் 1951-ம் ஆண்டு சித்திரைமாதம் 12-ந்திகதி வியாழக்கிழமை—பிரதிசதம் 10

## யேசுகைத்தாதை எமக்குந்தாதை

"அர்ச். சூசையப்பரின் சீவியமும், அவரின் மகிமைப்பிரதாபமும்" என்ற ஒருபெரியபிரபந்தம் அநேக வருடங்களின் முன் E. H. தொம்ஸன், M. A. என்ற சிறந்தகல்விமானல் எழுதப்பட்டது. "வசனநடையிலே ஓர்ஆங்கிலதேம்பாவணி" என்று அதனைக்கூறின் மிகையாகாது. பின்வருவது, அந்த அமிர்த சாகரத்திலிருந்து எடுத்த ஓர் திவலையாகும்.

மனிதர்அனைவருள்ளும் மேலாகச் சர்வேசுரன் தமது அணைகடந்த அன்புமுழுவதையும் பொழிந்து, தமது திரவியங்களாக மதித்து அரவணைத்தது தேவசுதனையும், அவர் திருத்தாயாரையுமே. இந்த ஒப்புயர்வற்ற திரவியங்களைப் போஷித்துப்பாதுகாக்க ஐசுவரியவான்களையல்ல, அரசர்பிரபுக்களையல்ல, தேவதூதர்களைத் தானுமல்ல, ஆனல், அர்ச். சூசையப்பரையே அவர் தெரிந்துகொண்டார். தேவதாயார் தாவீதரசனின் வங்கிஷபதியாயிருந்த "ஒரு மனிதனுக்குவிவாகபந்தனமான ஒருகன்னிகை." ஆகவே, சூசையப்பர் அவவுக்குத் திருப்பத்தா. "தாவீதின்குமாரனுகிய சூசாய்! நீ உனதுமனைவியாகிய மரியம்மாளை...." சுபாவமுறையிலே சூசையப்பர் தேவகுமாரனுக்குப்பிதாவில்லையானலும் மற்றெல்லாவகையிலும் எம்மாதவர் அவருக்குப் பிதாவாயிருக்கும் உன்னதமேன்மையைப் பெற்றிருந்தாரென்பது சுவிசேஷத்திலே உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெள்ளிதிற் புலப்படுகின்றது. "மகனே இதோ உம்முடையதந்தையும் நானும் வியாகுலத்தோடு உம்மைத்தேடி அலைந்தோமே." அன்றுமாத்திரமல்ல, இன்றுமே அர்ச். சூசையப்பர் அந்த உரித்தில் அகமகிழ்கின்ருர். நித்தியத்துக்கும் அழியாத உரித்து அது.

"பிள்ளையையும் தாயையும் எடுத்துக்கொண்டு........" ஆம்! எப்போதைக்கும் எடுத்துக்கொள்! ஏற்றுக்கொள்! தேவதூதன்செப்பிய அந்த வாக்கியங்களினல் யேசுநாதருக்கும், அவர்மாதாவுக்கும் அர்ச். சூசையப்பர் பாதுகாவலராயினர். அம்மட்டா! சிலுவையடியில்நின்ற மாதாவைநோக்கி, "ஸ்திரீயே! இதோ உமதுகுமாரன்" என்று இரட்சகர் வசனித்தபொழுது, மனுக்குலம்முழுவதுக்கும் அவ தாயாரானர். அதாவது "தேவதாய் எமக்குந்தாய்" ஆனர். அவ்விதமே அவதரித்தவார்த்தையானவரையும், அவர்மாதாவையும் சூசையப்பரது பாதுகாவலில்வைத்தஅன்றே எங்கள்எல்லோரையும் தயாபரம்நிறைந்த பராபரன் வல்லபமிக்க அவரது நிழலிலே வாசம்பண்ண வைத்தார்அன்ரே!

எல்லாவகையிலும், எத்திறத்தினர்க்கும் அர்ச். சூசையப்பர் மகிமைபொலிந்தகருணைநிறைந்த பாதுகாவலரேயாவர். திடங்கொண்ட, வல்லபம்மிக்க பரிபாலகராவர். பொதுவான ஒரு முறையில்அல்ல, ஆனல், விசேஷித்தஓர்முறையிலே திருக்குடும்பத்தின் பாதுகாவலர், குடும்பங்கள்அனைத்துக்கும் பாதுகாவலர். திருச்சபைக்குப் பாதுகாவலராகுமுன், அதன்தலைவருக்குப் பாதுகாவலரானவர். வறுமையைச் சிநேகித்தார். வறியவர்க்குத் தஞ்சமானவர். ஐசுவரியவான்களுக்கு வழிகாட்டும் ஒருஒளிஆவர். ஏன்? ஏனெனில், எல்லாஐசுவரியங்களிலும் மேலானஐசுவரியம்தேவனுடன் ஐக்கியப்பட்டிருப்பதே என்பதை அவரதுசீவியம் துலாம்பரமாக எடுத்துக்காட்டுகிறது. தொழிலாளிகட்கோ, பிணியாளர்கட்கோ சஞ்சலமுற்றவர்கட்கோ, பிரயாணிகட்கோ, இல்லறத்தவர்க்கோ, துறவறத்தவர்க்கோ, மரணத்திரையுள் இதோ மறையப்போவாருக்கோ, எங்கள்குருமுனிவர்கட்கோ — எத்திறத்தினர்க்கும் அவர் விசேட பாதுகாவலரேயாம்.

ஆம், குருமுனிவர்க்கென்று விசேடமாக இங்கு குறிப்பிடல் தகும். பாலயேசு, வாலயேசு, சூசையப்பர்கட்டளையிட, அக்கட்டளைக்கு இனிதே அமைந்தார். அவ்விதமே "பலிபீடத்தில்இறங்கும்" எனக் குருபூசகர் சொல்ல, யேசு இரட்சகர்உடனே இறங்குகின்ருர். அவர்அழைத்தவுடன் ஆண்டவர் வருகிருர். புறப்படுமெனப் புறப்படுகிருர். பேழையினுள்அமருமென அமருகின்ருர். பாலகயேசுவைச் சூசையப்பர் ஏந்தினர். மார்புடன் அணைத்தார். முகத்தோடு முகம்வைத்து முத்தாடினர், நீராட்டினர், போஷித்தார், பள்ளிகொள்ளவைத்தார், சத்துராதிகளின் குரூரகைகளிலிருந்து அவரைத் தற்காத்துவைத்தார். அஞ்ஞானம்நிறைந்த எகிப்தியருக்கு முதன்முதலாகச் சுவிசேஷத்தைப்போதித்து அவ

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

— சூ. அ. —

## ஊதாரிப்பிள்ளை

(முன்தொடர்ச்சி)

### உத்தம மனஸ்தாபம்

### இரட்சணியத்தின்வழி

**1. காத்திரமான ஒருவிஷயம்**

யேசுநாதருக்குப் பக்கத்திலே சிலுவையில் அறையுண்டிருந்த கள்வர்களில் ஒருவன் அவரை நோக்கி: "ஆண்டவரே, தேவரீர் உம்முடைய இராச்சியத்தில் சேரும்பொழுது அடியேனையும் நினைத்துக்கொள்ளும்" என்ருன். "இன்றேநீஎன்னேடு பரகதியிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்று ஆண்டவர் அவனுக்கு விடையளித்தார். (லூக்—23) இச்சம்பவத்தைத்தியானித்து அர்ச். அகுஸ்தீனர் "ஓ! பாக்கியசாலியான கள்வனே! உயிருள்ளளவும் களவுசெய்தாய்! உயிர் நீங்கும்பொழுது நீ மோட்சத்தைக் களவெடுக்கிருய்" என்று பிரமித்துக் கூறுகின்ருர். உத்தமமனஸ்தாபப்படுவதினல் நாங்களும் நல்லகள்வனைப் போல நொடிப்பொழுதில் இஷ்டப்பிரசாதத்தை அடைந்துகொள்ளலாம்.

பட்டணத்துப் பாவியென அழைக்கப்பட்ட மரியமதலேனம்மாள் ஒருவார்த்தையும் பேசாமல் ஆண்டவர் திருப்பாதங்களின்அருகிற் தெண்டனிட்டு அவற்றைத் தனதுகண்ணீராற் கழுவிக் கூந்தலால் துடைத்தாள். அவரது திருப்பாதங்களைமுத்தமிட்டு வாசனைத்தைலத்தை அவற்றிற் பூசினள். இந்தப்பாவிக்குச் சார்பாக எங்கள்ஆண்டவர் பரிசேயனன சீமோனுக்கு நியாயமும் சொல்லுகிருர். "இவள் மிகவும் சிநேகித்ததினல்; இவளுக்கு மிகுந்த பாவங்கள் பொறுக்கப்படுகின்றன" என்றும் அவரே சொல்லுகிருர். சொல்லி, மதலேனளை நோக்கி: "உன்பாவங்கள் உனக்கு மன்னிக்கப்படுகின்றன; உன்விசுவாசம் உன்னை இரட்சித்தது; நீ சமாதானத்தோடேபோ" என்றும் வசனிக்கிருர்: (லூக்—7) மரியமதலேனம்மாளைப்போல நாங்களும் தேவநேசத்தினல் அல்லது உத்தமமனஸ்தாபத்தினல் இமைப்பொழுதில் எங்கள் பாவங்களுக்கு மன்னிப்பை அடையலாம்.

உத்தமமனஸ்தாபத்தைப் பற்றி அநேககிறீஸ்தவர்கள் அறிந்தது அற்பனில் அற்பம். ஆயினும் அது காத்திரம்மிக்க ஒரு விஷயம். "இரட்சணியத்தின் மகாவழி" என அர்ச். லிகோரியார் தாம் எழுதிய ஒருசிறுசெபப்புத்தகத்துக்குப் பெயரிட்டிருக்கிருர். அப்புத்தகத்தினல் வரக்கூடிய மகாநன்மைகளைப் பற்றி அவருக்கு அத்துணை பெரும்நம்பிக்கை இருந்தபடியினல் ஒவ்வொருவர் கையிலும் அது இருக்கவேண்டும் என அவர் விரும்பினர். இன்னும் கூடுதலான உண்மையுடன் உத்தமமனஸ்தாபத்தை "இரட்சணியத்தின் மகாவழி" என நாம் அழைக்கலாம். ஏனென்ருல், வெறும் செபத்தைப்பார்க்க உத்தமமனஸ்தாபமுயற்சியினல் அதிகம் எளிதாய் நாம் இரட்சணியம் அடையலாம்.

பெரியவேதசாஸ்திரியும், மகாபத்திமானுமாக விளங்கிய கருதினல் பிரான்சிலின் ஆண்டவர் "உலகம் முழுவதையுஞ் சுற்ருேட்டஞ்செய்யும் சிலாக்கியம் எனக்குக் கிடைக்குமென்ருல், எனது பிரசங்க விஷயங்களில் மகாமுக்கியமானது உத்தமமனஸ்தாபமே" என்று சொல்லிவருவார். பச்சாத்தாபத் தேவதிரவியஅனுமானத்தை யேசுக்கிறீஸ்துநாதர் ஏற்படுத்தமுன் எண்ணிறந்த பாவிகள் இரட்சணியமடைவதற்கு ஒரே ஒருவழியாயிருந்தது உத்தம மனஸ்தாபமேயாம். திருச்சபைக்குப் புறம்பாயிருக்கும் பாவிகளுக்கு இரட்சணியத்தின் ஒரேஒருவழியும் இதுவேயாம். சாவானபாவத்துடன்மரணத்தறுவாயிலிருந்து பாவசங்கீர்த்தனஞ்செய்யக் குருவானவர் இல்லையேஎன்று சஞ்சலப்பட்டுக்கொண்டு இருப்பவர்கள் இரட்சணியமடைய உத்தம மனஸ்தாபந்தான் ஒரேஒருவழியாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய தலைநகரில் நிர்மலா கல்லூரி

இந்தியாவின் தலைப்பட்டனமாகிய டில்லிநகரிலே கத்தோலிக்க சர்வகலாசாலைக் கல்லூரியொன்று அமைக்கப்படவிருக்கிறது. இது டில்லிநகர சர்வகலாசாலையில் அங்கமாகவுள்ள கல்லூரிகளில்ஒன்ருய் இருந்துவரும். இந்தியாவின் மற்றும் அநேக விசேஷப்பட்டநகர்களிலே கத்தோலிக்கர் செய்வதுபோல் டில்லிநகரிலும் உயர்தரகல்விபயிற்றுவதில் அங்குள்ள கத்தோலிக்கரும் பங்குபற்ற விரும்புவதாக அரசினருக்கு மனுச்செய்துகொண்டதின்பேரில், இந்தியஅரசாங்க கல்விமந்திரியார் அகதிகளான மாணவர்களுக்கெனச் சிலவருடங்களின் முன்னர் அமைக்கப்பெற்ற அரசாங்கமத்தியகல்லூரியை யேசுசபையாரிடம் கையளித்திருக்கின்ருர். அதை யேசுசபை அதிசிரேஷ்டர் மனமுவந்தேற்று, அதனை நடத்தும்படி அமெரிக்க ஐக்கியதேச மிசூறிமாகாணத்தைச்சேர்ந்த சென் ஆரயிஸ் சர்வகலாசாலைக் குருமாரிடம் ஒப்படைத்திருக்கின்ருர். இக்கல்லூரி மரியாயின் மாசற்ற இருதயத்தின் நாமந் தாங்கியதாய் 'நிர்மலாகல்லூரி' யென அழைக்கப்படும். சர்வதேச பிரஸ்தாபம்பெற்ற யேசுசபைக்குருமாரிற் சிலர் இதன் பேராசிரியர்களாக நியமனஞ் செய்யப்படுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

### ஸ்பெயினின் ஞானவளம்

உள்நாட்டுயுத்தம் நடந்த காலத்திலே குருமாரும், குருத்துவமாணவர்களும், கன்னிகாஸ்திரிமாரும் பெருந்தொகை கொல்லப்பட்டபோதிலும், அந்தயுத்தம் தொடங்கிய 1936-ம்ஆண்டிலும் பார்க்க தற்போது அதிகமான குருமார் ஸ்பெயினில் இருந்துவருகிருர்கள். இப்போது அங்கிருக்கும் குருமார் 31,085 பேர். இத்தொகை 1936-ம் ஆண்டிலும் ஏறக்குறைய 5,500 பேரை அதிகமாகக்கொண்டது. உள்நாட்டுயுத்தத்தின்போது கம்யூனிஸ்த குடியரசுப்படைகளாலும், கூட்டத்தினராலும் குருமாரும், குருத்துவமாணவர்களும், கன்னியாஸ்திரிமாருமாக 7,300 பேர் வரையிலே கொன்றழிக்கப்பட்டார்கள். இவர்களிலே 13 மேற்றிராணிமாரும், 6,755 குருமாரும், 283 கன்னிகாஸ்திரிமாரும், 249 குருத்துவ மாணவர்களும் அடங்குவார்கள். இப்போது ஸ்பானிய குருமடங்கள் மாணவர்களால் வெகுவாகத்தேங்கியிருக்கின்றன. அங்கு சமயபக்தி முன்னில்லாதவகையிலே மறுமலர்ச்சியடைந்திருக்கிறது. அதனல் ஸ்பெயின் திரும்பவும் மிஷனரிமாரை அனுப்பிக்கொண்டிருக்கிறது.

### ஜேர்மனியும் வத்திக்கானும்

ஜேர்மனியினிடமாக வத்திக்கான் ஸ்தானிகராக அமெரிக்க ஐக்கியதேச பார்கோநகர் அதிமேற்றிராணியாரான அலோய்சியஸ் முவெஞ்ச் ஆண்டவரைப் பாப்பரசர் நியமனஞ்செய்திருக்கிருரென மேற்குஜேர்மனியின் பிரசாதிபதிக்குச் சென்ற பங்குனிமாதம் 6-ந்திகதி செய்தியனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது. அன்றுதினமே ஜேர்மனி யுத்தத்தின்பின் திரும்பவும் தனது சொந்த வெளிநாட்டுக்கொள்கையைக் கொண்டுநடத்த அதிகாரம் அளிக்கப்படலாயிற்று. மேற்கு ஜேர்மனியும் சமீபத்திலே தனது ஸ்தானிகர் ஒருவரை வத்திக்கானுக்கு அனுப்பிவைக்கும். ஜேர்மனியிலே பாப்பரசின் ஸ்தானிகராலயம் 1920-ம் ஆண்டு பச்செல்லி அதிமேற்றிராணியார் (தற்போதைய பாப்பரசர்) நியமனஞ் செய்யப்பெற்றதோடு திறக்கப்படலாயிற்று.

### பாப்பரசின் கொடி

2-வது உலகயுத்தத்தின்பின் முதன்முறையாக ஜேர்மனியிலே பொன்நகரிலுள்ள ஓர்கட்டடத்தின்மேலாக உத்தியோகமுறையிலே பாப்பரசின் கொடிஏற்றிப் பறக்கவிடப்பட்டிருக்கிறது. இந்தக்கட்டடம்சமீபத்திலேபாப்பரசின் ஸ்தானிகரது காரியாலயமாக விருக்கின்றது. அச்சந்தர்ப்பத்தைக் கணிசப்படுத்துமாறு பாப்பரசின் புதியஸ்தானீகராகத் தெரியப்பெற்றுள்ள முவெஞ்ச் அதிமேற்றிராணியார் சமீபமான ஓர்கிளப்பிலே ஓர்வரவேற்பு உபசாரம் நடத்தினர். மேற்குஜேர்மனியின் அரசாங்க பிரதமர் அடினேவர் அவர்களும் அதற்குச் சமுகமளித்திருந்தனர். பாப்பரசின் புதியஸ்தானிகர் சென்றதிங்கட்கிழமை தமது நியமன அதிகாரபத்திரங்களைப் பிரதமருக்குச் சமர்ப்பித்திருக்கின்ருர். இவர் ஜேர்மனிக்கு அனுப்பப்பெற்ற பாப்பரசின் மூன்ருவது ஸ்தானிகராவர்

### பாப்பரசரின் பேர்கொண்டவீதி

பரிசுத்தபாப்பரசர் சமாதானத்துக்காக ஆற்றியுள்ள தொண்டுகளைப்பாராட்டி ஜேர்மனியிலே பவேரியாநாட்டின் தலைப்பட்டணமாகிய மியூனிச் நகரின்மத்தியிலுள்ள ஓர்வீதிக்குப் 'பச்செல்லிவீதி'யென நாமமிடப்படவிருக்கிறது. 1925-ம் ஆண்டு பவேரியாவுடன் செய்யப்பட்ட வத்திக்கான் உடன்படிக்கைக்குக் கைச்சாத்திடப்பெற்ற இடமாகிய அதிமேற்றிராணியாரின்மாளிகை இந்தவீதியில்தான் இருந்துவருகிறது. அப்போது பரிசுத்த பாப்பரசர் கருதினல் பச்செல்லியென அறியப்பெற்றிருந்தார்.

### பாப்பரசரின் உருவச்சிலை

உலகிலேயே மகாஉன்னதமானதாய், பரிசுத்தபிதாவின் 130 அடி உயரமான வெண்கல உருவச்சிலையொன்று பிறேசில் நாட்டைச்சேர்ந்த பவுலேநகரிலே நிறுவப்படவிருக்கிறது, பாப்பரசரே இந்நகரின் பரிபாலகராய் இருந்துவருகின்ருர். பிறேசில் நாட்டிலே சஞ்சரித்துவருகின்ற ஓர் சிசிலியசிற்பியே இதனைச்செய்வதற்கென நடத்தப்பட்ட ஓர்போட்டியில்வெற்றிபெற்றிருக்கின்ருர்.

### இஸ்றயேலும் கத்தோலிக்கரும்

யூதர்களின் இஸ்ருயேல்நாட்டிலே தற்போது 50,000 கத்தோலிக்கருக்குமேல் இருந்துவருவதாகப் பிந்தியபுள்ளிவிபரம் அறிவிக்கின்றது. இவர்களில் அரைவாசிக்குமேற்பட்டோர் யூதசமயத்திலிருந்து மனந்திரும்பிக் கத்தோலிக்க திருமறையைத் தழுவிக்கொண்டவர்கள். ஆனல், மனந்திரும்பிய இந்தயூதர்கள் பழிவாங்கப்படுவார்களென்ற அச்சங்காரணமாகத் தங்கள் சமயத்தைப் பகிரங்கமாக அனுசரிக்க முடியாதிருப்பதாகச் சொல்லப்படுகிறது. மனந்திரும்புகின்ற யூதர்கள்மட்டிலே எதிரிடையான பலநடபடிக்கைகள் எடுக்கப்பட்டுவராவிடின் ஒருபெருந்தொகையான யூதர்கள் கத்தோலிக்க திருமறையைத் தழுவிக்கொள்வார்களென அறிவிக்கப்படுகிறது. கத்தோலிக்க யூதர்களின் பரோபகாரசங்கங்களுக்கு இஸ்ருயேல் அரசாங்க அதிகாரிகளிடமிருந்து எவ்வித சகாயதனமும் அளிக்கப்படுவதில்லை.

## தமிழ் ஆசிரியர்களின் ஞான ஒடுக்கம்

—✻—

— நவசிபி —

சலாப மேற்றிராசனத்தைச்சேர்ந்த கத்தோலிக்க தமிழ்ப்பாடசாலை ஆசிரியர்களின் ஆன்மநன்மையைக் கோரி இம்மேற்றிராசன விக்கார்ஜெனறலும், பாடசாலைகளின் பிரதம முகாமைக்காரருமான மொஞ்சிஞ்ஞோர் வி. மைக்கல் பெறேரா சுவாமிகளால் ஏற்பாடுசெய்யப்பட்ட ஞானவொடுக்கம் கடந்த 27-3-51 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 6 மணிமுதல் 31-3-51 சனிக்கிழமைகாலை வரையில் இலங்கைக் கத்தோலிக்க யாத்திரைத்தலங்களில் ஒன்ருன தலைவில்லுச் சந்தானள்நாயகியின் திருப்பதியில் பத்தியருட்சிக்குரிய விதமாக நடைபெற்றது. தினமும் நேரக்கிரமத்தின்படி ஞான ஒடுக்க முயற்சிகள் நடைபெற்றன. நான்கு தினங்களிலும் ஆழ்ந்த சமயக்கருத்துக்களை அரியதமிழ்ச்சொற்களில் பொதித்தும், அற்புதமானகதைகள் உதாரணங்களை எடுத்துக்காட்டி விளக்கியும், உள்ளத்தைஉருக்கும் உயரியபிரசங்கங்கள் செய்தும், செபதபங்களில் பங்குபற்றி வழிநடத்தியும், திவ்வியபூசையை அவ்வபோது நிறைவேற்றியும், பாவசங்கீர்த்தனம் கேட்டு பாவவிமோசனமளித்தும் பத்திவிநயத்தோடு ஞானவொடுக்கஞ்செய்து நற்பலனடைவதற்குத் தலைமைதாங்கிப் பேருதவி செய்தவர், யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச்சேர்ந்த ஓர் குருப்பிரசாதியான வண. பி. வில்லியம் யேசுதாசன் சுவாமிகளே. சனிக்கிழமை காலை 7மணிக்கு வாக்குத்தத்தம் புதுப்பிக்கப்பட்டு ஞானவொடுக்கம் முடிவுற்றதும், பிரசங்கியாரை உபசரிக்கும் முகமாக அதிவண. விக்கார் ஜெனறல் சுவாமியவர்கள் தலைமையில் ஒருகூட்டம்நடைபெற்றது. அதிலே சகல ஆசிரியர்களினதும்சார்பாக நரக்களித் தமிழ்க் கலவன்பாடசாலை ஆசிரியர் திரு. வி. எஸ். பிள்ளையவர்கள் கூறிய வாழ்த்துரையிலே, இந்த ஞானவொடுக்கத்தை ஒழுங்குசெய்த பாடசாலைகளின் பிரதமமுகாமைக்காரர் அதிவண. மைக்கல் பெறேரா சுவாமியவர்களையும், ஞானவொடுக்கத்தைச் சிறப்பாக நடாத்திவைத்த வண. வில்லியம் யேசுதாசன் சுவாமிகளையும், இருப்பிடவசதிகள், போசனசௌகரியங்களைச்செய்தருளிய திருசேத்திரப் பரிபாலனர் வண. ஏ. மாட்டீன் பறுணந்து சுவாமிகளையும், செபதபங்களை ஒழுங்காகநடத்தியும், உணவுபோன்ற மறு காரியங்களைத் திறமையாக நிர்வகித்தும்வந்த நிர்வாகசபை ஆசிரியர்கள் திரு. எஸ். எஸ். பறுணந்து, திரு. டபிள்யு. எவ். லோவ், திரு. ஜே. ஏ. மிராண்டா, திரு. ஏ. எம் பெறேரா ஆகியோரையும் பாராட்டிப்பேசி நன்றி தெரிவித்துக்கொண்டார். பிரசங்கியாருக்கு உபசாரமாகப் பணமுடிப்பொன்றும் வழங்கப்பட்டது. பின்னர் விக்கார்ஜெனறல்சுவாமியாரும் பிரசங்கியாரும் பாராட்டுதலுக்குப் பிரதிநன்றி தெரிவித்துக்கொண்டதும் காலை 9 மணியளவில் கூட்டம் சுபமே கலையலானது.

— நிருபர்

கர்த்தர் உத்தானத்தின் பின்

## 3-ம் ஞாயிறு

சுவிசேஷ வாசிப்பு

(அரு. 16: 16—22)

அக்காலத்தில் யேசுநாதர் தம்முடைய சீஷர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது: இன்னுங்கொஞ்சக்காலம், இதன்பின் நீங்கள் என்னைக்காணமாட்டீர்கள். மீண்டும் கொஞ்சக்காலம், அதன்பின் என்னைக் காண்பீர்கள். ஏனென்ருல் நான் பிதாவினிடம்போகிறேன் என்ருர். ஆதலால் அவருடைய சீஷர்களில் சிலர்: கொஞ்சக்காலம், அதன்பின் என்னைக் காணமாட்டீர்கள். மீண்டும் கொஞ்சக்காலம், அதன்பின் என்னைக்காண்பீர்கள். ஏனெனில் பிதாவினிடம் போகிறேனென்று நமக்குச்சொல்லுகிருரே! அதென்ன? என்று ஒருவரோடு ஒருவர் சொல்லிக்கொண்டார்கள். இன்னும் கொஞ்சக்காலம் என்கிருரே, இதென்ன? இவர் வசனிக்கிறது ஏது என்று விளங்கவில்லையே என்ருர்கள். யேசுநாதரோ அவர்கள் தம்மை வினவவிரும்புகிருர்களென்று அறிந்து அவர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது: கொஞ்சக்காலம், அதன்பின் என்னைக்காணமாட்டீர்கள்; பின்னும் கொஞ்சக்காலம், அதன்பின் என்னைக்காண்பீர்கள் என்று நான் சொன்னதினல் அதைக்குறித்து உங்களுக்குள்ளே கேள்விகேட்கிறீர்களே. மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள் பிரலாபித்து அழுவீர்கள், உலகமோ சந்தோஷப்படும். ஆனல் நீங்கள் துக்கப்படுவீர்கள். ஆயினும் உங்கள் துக்கம் சந்தோஷமாகமாறும். ஸ்திரீயானவள் பிரசவிக்கையில் தன் காலம்வந்திருக்கிறதினல் துயரப்படுகிருள். பிள்ளையைப் பெற்ற பின்போவெனில் ஓர்மனிதன் உலகத்தில் பிறந்ததினாற் சந்தோஷமுடையவளாய், இனிப் பிரசவ வேதனையை நினையாள். அப்படியே நீங்களும் இப்போது துயரமுள்ளவர்களாயிருக்கிறீர்கள். ஆனல் மறுபடியும் உங்களைக்காண்பேன். அப்போது உங்கள் இருதயம் சந்தோஷிக்கும். மேலும் உங்கள் சந்தோஷத்தை உங்களிடத்தினின்று ஒருவனும் பறியான் என்ருர்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னமலரின் சின்னமலர்கள்

சின்னமலராகிய அர்ச். குழந்தை யேசு தெரேசம்மாள் நமது ஆண்டவரை அதிகமதிகமாய் நேசிக்கநேசிக்க அவளிடம் ஆத்துமஇரட்சணிய ஆவலும் மேன்மேலும் அதிகரித்துவந்தது. இந்தஆவல் அவளுக்குமட்டுமன்று, ஆனால் சகல அர்ச்சியசிஷ்டர்களுக்குமே உண்டாயிருந்தது. ஏனெனில், சர்வேசுரனைச் சிநேகிக்கிறவர்கள் அவர் நேசிக்கிறவர்களை நேசியாமலிருக்க முடியாது. அதனாலேயே தேவசிநேகமும் பிறர்சிநேகமும் இணைபிரியாச் சங்கிலியென்று சொல்லப்பட்டிருக்கிறது. நமது ஆண்டவர் ஆத்துமங்களை நேசித்ததால் தமது உயிரையே அவைகளுக்காகக் கையளித்தார். அவ்வாறே அவரைநேசிக்கிற அர்ச்சியசிஷ்டர்களும் ஆத்துமாக்களுக்காகத் தங்கள் உயிரைக்கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள். ஆன்மாக்களை இரட்சிக்கும் அலுவலைப்பார்க்க மேலானது வேறொன்றில்லை. ஆகையால் அர்ச். குழந்தையேசு தெரேசம்மாள் ஆண்டவரைநேசித்து அவருக்காக ஆத்துமங்களையும் நேசித்தாள்.

இந்த ஆத்தும இரட்சணிய அலுவலைச்செய்ய அவள் தெரிந்துகொண்ட வழியென்ன? தான் வெளியிற்சென்று பிரசங்கிக்க முடியாதென்றும், அரும்பெருங் காரியங்களைச் சாதிக்கத் தான் ஆற்றல் இல்லாதவளென்றும் அறிந்துகொண்டஅவள் குருமாருக்காக வேண்டிக்கொள்வதிலும், அதனோடு ஏற்ற சொற்ப ஒறுத்தல்களைச் சேர்ப்பதிலும் தன்கவனத்தைச் செலுத்தினாள். இந்த ஒறுத்தல் முயற்சிகளைத் தான் சிறியபுஷ்பங்களென்று—சின்னமலர்களென்று அவள்சொல்வது வழக்கம். இந்தமலர்கள்தான் அவள்கையிற் கொண்டுள்ள பாடுபட்டதிருச்சுரூபத்தோடு ஒன்றித்திருக்கின்றன. இவைகள்தான் அவளதுபடத்தில்காணப்படும் ரோசாமலர்கள். அதாவது யேசுவின் திருப்பாடுகளோடு தனது அற்பசொற்ப ஒறுத்தல்களை ஒன்றுசேர்த்திருக்கிறாள். மலர்மாலையைக் காட்டிலும் இந்த ஒறுத்தல்மாலைதான் உத்தமமானது. அற்பகாரியங்களை அவமதித்துப் பெருங்காரியங்களைச் செய்யலாமென்றிருப்பது சாத்தியமாகுமா? சிறு கைங்கரியங்களைச்செய்து அனுபவசித்தியடையாது திடீரெனப் பெருங்காரியத்தைச் சாதிப்பது எவ்வாறு? அற்பகாரியங்களை அசட்டைசெய்தவர்கள் அரும்பெருங்காரியங்களைச்செய்வது அருமையன்றோ!

மேலும் திவ்வியயேசு மற்றவழிகளையெல்லாம்விட்டுப் பாடுபடும்வழியையே பலனுள்ளதாகக்கொண்டார். அதனால் ஆத்துமங்களை இரட்சிக்க அதிலும் மேலான வழி வேறென்னஉண்டு? அவரேவழி, அவரைப்பின்பற்றுதலே முறையாகும். இவற்றையெல்லாம் அறிந்த அர்ச். குழந்தையேசு தெரேசம்மாள் தனது சிறுபுண்ணியமுயற்சிகளைச் சிறுபூக்களெனக்கொண்டு அவைகளை ஆண்டவரின் திருப்பாடுகளோடு ஒன்றிக்கச்செய்து அவற்றின் பலனை ஆத்துமாக்களுக்கு அளிப்பதே தனது அலுவலெனக் கொண்டாள். தான் பரலோகஞ்சென்றபோதிலும் அங்கிருந்து பூலோகத்திலுள்ள நமக்கு இப்பூக்களைத்தருவதாகச் சித்தங்கொண்டாள். அங்கிருந்து அவள் அள்ளியிறைக்கும் இந்தமலர்கள் சர்வேசுரனின் வரப்பிரசாதங்களேயல்லாது வேறல்ல. அதாவது இவ்வுலகில் இருந்தபோது தனதுசிறியபுஷ்பங்களை யேசுவின் திருப்பாடுகளோடு ஒன்றித்ததின் பலன்களை இப்போது அவள் பரலோகத்தில் அனுபவிப்பதோடு நமக்கும் தாராளமாய்த்தருகிறாள். இதனோடு அவள் மடத்திற்சேரும்போது தன்னைத்தானே சிறியபுஷ்பம் என்றழைத்தாள். அதாவது, கார்மேல்மடத்தை ஓர் பூந்தோட்டமாகவும், அதில் தான்பிரவேசித்ததால் அங்கிருந்த கன்னியர்கள் குழாமில் தன்னை ஒரு சிறுகன்னிகையாகவும் பாவித்துச் "சிறியபுஷ்பம்" எனச் சொல்லிக்கொண்டாள். அவள் சொல்லால் ஏற்பட்டதைக்காட்டிலும் அவள் செயலால் ஏற்பட்டதே யேசுவின் சிறியபுஷ்பம்.

அவளது சிறியநற்கிரியைகளால்—சிறுஒறுத்தல்முயற்சிகளாகிய மலர்களால் அவளின்சிறியபுஷ்பம் எதுவென்பது நன்றாய்விளங்குகிறது. இச்சிறுபுஷ்பங்கள் சகலருக்கும்உண்டு. ஆனால் அவளோ அப்புஷ்பங்களை யேசுவின் திருப்பாடுகளோடு ஒன்றித்து நறுமணங்கமழும் ரோசாபுஷ்பங்களாக மாற்றினாள். நம்மில் அப்படிச்செய்கிறவர்கள் எத்தனைபேர்? நாம் ஏன் அவள்செய்ததுபோல் செய்யப்படாது? குழந்தையேசு தெரேசம்மாள் சிறியபுஷ்பம். ஆனால், பெரிய அர்ச்சியசிஷ்டவள். அவள் என்னபெருங்காரியத்தைச் சாதித்தாள்? தனது அந்தஸ்தின்கடமைகளைச் செய்தாள், பிரமாணிக்கமாய்ச் செய்தாள், யேசுவின் திருப்பாடுகளோடு தனது அற்பஅலுவல்களை ஒன்றிக்கச்செய்தாள். வேறொன்றும் செய்யவில்லை. நமது கடமைகளை நாம் ஏன்பிரமாணிக்கமாய்ச் செய்யமுடியாது? அவைகளை நாம் ஏன்ஆத்துமாக்களுக்காகச் செய்யமுடியாது? இனிமேலாவது அவளைப்பின்பற்றுவோம். ஆத்துமங்களை இரட்சிக்க நம்மாற்கூடியதெல்லாம் செய்வோம். ஆண்டவர் திருவருள்பாலிப்பார். அர்ச். குழந்தையேசு தெரேசம்மாள் சகாயஞ்செய்வாள்.

## வெங்காயம்

(விஜயசிங்கன்)

வெங்காயம் நமது உணவுப்பதார்த்தங்களில் இன்றியமையாத ஓர்பொருளாய் இருந்துவருகிறது. ஆனால், நான் இங்குகூறவந்தது கடைச்சரக்கான வெங்காயத்தைப் பற்றியல்ல. அதிகடித்தால் கண்ணீர்வரக்கூடிய வஸ்துவுமல்ல, தோட்டத்தில் பயிரிடப்படும் தாவரப்பொருளுமல்ல, காசுக்குக் கையில்நிறுத்துவாங்கும் பண்டமுமல்ல. ஆனால், அது இறைவனால் படைக்கப்பட்டு, அவருக்காகவே வாழ்ந்து, முடிவில் அவரதுபேரின்பத்தைஅடையத் தன்னைத் தயார்செய்துகொள்ளவேண்டிய பூதஉடம்புஆகும். அதைத்தான் வெம்மை + காயம் = வெங்காயம் என்னும்பெயரால் குறிப்பிடுகிறேன். பஞ்சபூதங்களான இச்சேர்க்கையை வெங்காயம்எனக் கூறிப்போந்தார் பெரியோர். அதற்குக் காரணம் இல்லாமலில்லை. படைப்புண்ட சிருஷ்டிகளாகிய நாம், மெய், வாய், கண், மூக்கு, செவியாகிற புலன்களை அடக்கியாளாது, அவைகளின் இச்சைகளுக்கு உட்பட்டு, படைத்த சிருஷ்டிகரை மறந்து, பஞ்சமாபாதகங்களைச் செய்யத்துணிந்து, பாவச்சேற்றில் புதைந்து, அநித்தியஉலகைச் சதமெனநினைந்து, முடிவில்லாதபேரின்பத்தைக் கைநெகிழ்ந்துவிடுவதற்கு இந்தச் சரீரம் காரணமாயிருப்பதால், இதைக் கொடியசரீரம்எனக் கூறினார் விழுமியோர்.

இளமைநிலையாமை, யாக்கைநிலையாமை, வாழ்க்கைநிலையாமை ஆகியவற்றை நாம் தினமும் கண்டும்கேட்டுமிருக்கிறோம். நீரில்தோற்றுகின்ற குமிழிபோன்றது இளமை என்றும், நீரில்எழுதிய எழுத்துப்போல் யாக்கை இமைப்பொழுதில் அழியக்கூடியது என்றும், நுனிப்புல்லில் தூங்கும்பனிநீர் நிலைத்துநிற்காததுபோல் வாழ்க்கையும் நிலைத்துநில்லாது என்றும் நாமறிவோம். இன்றிருப்பாரை நாளைக் காணோம்; நாளையிருப்பாரை மறுதினம்காணோம். மங்கைப்பருவத்தில் "வேல்கண்ணாள்" என்று பலரால் புகழப்பட்டவள், சிறிது காலத்துக்குள் முதுமைக்கிலக்காகிக் "கோல்கண்ணாள்" என்று பிறரால் ஒதுக்கப்படுவதைநாம் காண்கின்றோம். "வாழ்வாவதுமாயம், இது மண்ணாவதுதிண்ணம்" என்பதும், "காயமே இது பொய்யடா, இது காற்றடைத்ததோர் பையடா" என்பதும் நமக்குப்பரிச்சயமான பழமொழிகளே. எனவேதான் பண்டைக்காலப் புலவரொருவர், பாழும் உடம்பைக் குறித்துச் சிறந்தகருத்தமைந்த பாடலொன்றைச் சிலேடையாகப் பாடியுள்ளார். அது பின்வருமாறு:

வெங்காயம் சுக்கானால் வெந்தயத்தால் ஆவதென்ன
இங்கார் சுமந்திருப்பார் இச்சரக்கை —மங்காத
சீரகத்தைத் தந்தீரேல் தேடேன் பெருங்காயம்
ஏரகத்துச் செட்டி யாரே.

அழகியபாடல். அனைவருக்கும் அர்த்தம்எளிதில் புரியக்கூடிய பாணியில், எளிய இனிய கருத்தாழமுள்ள பாடலாகச் சமைக்கப்பட்டுள்ளது. இதுபுறக்கண்களுக்கு வெறும் உதிரிவார்த்தைகளடங்கிய கடைச்சரக்குப் பட்டியலாகத் தோன்றலாம். வெங்காயம், சுக்கு, வெந்தயம், சீரகம், பெருங்காயம் முதலியசாமான்கள் மளிகைக்கடைச் செட்டியாரிடம்மலிவாகவாங்குவதற்குப் புலவர் பாடியிருக்கிறார் என எண்ணலாம். ஆனால், அகக்கண் கொண்டு ஆராய்வாருக்கு ஆழ்ந்தஅரிய உண்மைகள் அகப்படும இப்பாடலில். "இறைவனே! மனிதனது கொடிய சரீரமானது சுக்குப்போல் உலர்ந்து பிரயோசனமற்றதாகிவிட்டால், அந்தக் கசப்பான சரீரத்தால் என்னவினையாற்றமுடியும்! அதைச்சுமந்து திரிவதால்தான் என்னபயன் பெறக்கூடும்! எனவே, அழியாதசிறப்புள்ள நும் பேரின்ப வீட்டைக்கொடுத்தால், இந்தஅழிவுறும் சரீரத்தை விரும்பமாட்டேன்" என்பதைக் கவிஞர் சுருங்கச்சொல்லி விளங்கவைத்துள்ளார்.

யாக்கை நிலையாமையைப்பற்றிப் புலவர் பலர் பாடியவைகள் எண்ணிலடங்கா. சரீரத்தின் அநித்தியத்தை உய்த்துணராது, அந்தச்சரீரத்தைக்காப்பதற்காகக் கணக்கற்றமாந்தர் கேவலம் தீயவழிகளிற்சென்று திரவியந்தேடி மானபங்கமடைவதையும், சிலர் தில்லுமல்லும், திரியாவரமும், திருட்டுப்புரட்டும்செய்து பிறரைவஞ்சித்து வாழ்வதையும் நாம் கண்கூடாகக் காண்கின்றோம். "காதறுந்த ஊசியும் வாராதுகாண் கடைவழிக்கே" எனும் மூதுரையை அன்னார்அறிந்தும் அறியாதவர்போல் நடந்துகொள்கிறார்கள். உண்பதுநாழி, உடுப்பதுநான்குமுழம் உடைத்தான மனிதன் பொன்னேபோல்போற்றி வளர்க்கப்பட்ட தன் உடம்பு ஒருநாள் மண்ணுக்கு இரையாகிக் காக்கை கழுகுக்கூட்டங்களுக்கு உணவாகப்போவதை மறந்துவிடுகிறான்.

"காக்கை நரிசெந்நாய் கழுகொருநாள்
தேக்குவிருந் தாமுடலைச் சீயென்ப தெந்நாளோ"

என்று தாயுமான சுவாமிகள் பாடியுள்ளார். "நரிக்கும், நாய்க்கும், நெருப்புக்கும், பருந்துக்கும், புழுவுக்கும், கழுகுக்கும் இரையாக்கத்தானோ என் சரீரத்தை இத்தனை காலமும் போற்றிவளர்த்தேன்" என்பதாகத் துடிதுடிக்கிறார் மற்றொரு புலவர்.

எரியெனக் கென்னும் புழுவோ வெனக்கென்னு மிந்தமண்ணுஞ்
சரியெனக் கென்னும் பருந்தோ வெனக்கென்னுந் தான்புசிக்க
நரியெனக் கென்னும் புன்னாயெனக் கென்னும் இந்நாறுடலைப்
பிரியமுடன் வளர்த்தே னிதனா லென்ன பேறெனக்கே.

உடலைப்போஷிக்கவும், பாதுகாக்கவும் மனிதன் பகீரதப் பிரயத்தனம் செய்வது உலகவழக்கமாகிவிட்டது. அறுசுவை உண்டியை அருந்துகின்றான். பட்டுப்பட்டாடைகளை உடுத்துகின்றான். பஞ்சுமெத்தையில் படுத்துறங்குகின்றான். வெட்பமும் தட்பமும் ஊறுசெய்யாவண்ணம் மாடமாளிகையில் வசிக்கின்றான். பளபளப்பான ரதங்களில் பவனிவருகின்றான். விலையுயர்ந்த ஆபரணங்களை அணிவிக்கின்றான். வாசனைகளை வரையாது பூசிக்கொள்கின்றான். உடம்புஅசௌக்கியமுறுவண்ணம் விலையுயர்ந்த பெனிசிலின் மருந்துகளைப் போட்டுக்கொள்கின்றான். தன்உடலுறுப்பு ஒவ்வொன்றையும் பதனமாகப் பேணுகின்றான்.

"பேன்நாறி வீழ்குழலைத் தேனாறென்றும்
பீளைஒழு கும்விழியை நீலமென்றும்
மேல்நாறும் சளிமூக்கை எட்பூவென்றும்
வெறுங்குறும்பிக் காதைஎழில் வள்ளைஎன்றும்
ஊன்நாறும் ஊத்தைப்பல் வாய் உதட்டை
ஒளிமுல்லை செவ்வாம்பல் கோவை என்றும்
தோல்நாறும் கன்னம்கண் ணாடி என்றும்
துயர்ஈளை பயில்குரலைக் குயில்தான் என்றும்"—

கவிஞர் அடுக்கிக்கொண்டே போகிற அவயவங்கள் அனைத்தையும் பாராட்டிச்சீராட்டி வளர்த்துவருகிறார்கள் இவ்வுலகமாந்தர். ஆனால், "மண்ணால் உண்டாக்கப்பட்ட மனிதன் திரும்பவும் மண்ணாய்ப் போவான்" என்னும் அருள்வாக்கைச் சற்றேசிந்தித்துப் பார்ப்பார்களேயானால் சரீரத்தின் நிலையாமையும், சதமற்றஉலகத்தின் தன்மையும் நன்குபுலப்படும்.

உலகம், பிசாசு, சரீரம்ஆகிய மூன்று சத்துராதிகளை அருள்மறை அர்ச்சியசிஷ்டர்கள் வென்று, கிறீஸ்துநாதருக்காகப் போராடியதைச் சரித்திரங்கள் சாற்றும். அன்னார் ஒறுத்தல் உபவாசத்தாலும், கசையடிகளாலும், கடினஉழைப்பாலும் தம் சரீரஇச்சைகளை அடக்கியாண்டு அமரத்துவம் அடைந்துள்ளார்கள். கிறீஸ்துவமக்களாகிய நாம் அன்னாரது அடிச்சுவடுகளைப் பின்பற்றிக் கொடியசரீரத்தின் ஆசாபாசங்களை அடக்கி, ஆண்டவருக்கு உகந்தவர்களாக விளங்கமுயற்சிப்போமாக.

(ச. போ.)

## மரணசங்கதி

ஊறணிவாசரும், பிறவூர்ப்பிரபல வியாபாரியும், சத்தியவேதபாதுகாவலன் சந்தாதாரர்களில் ஒருவரும், அநேககுடும்பங்களின் பாதுகாப்புத் தாதாவும், தயை, அன்பு, இரக்கம், ஈகைஉள்ளவரும், பலகுருப்பிரசாதிகளாலும் நன்கறியப்பெற்றவருமாகிய திரு. சிமியோன் லூக்காஸ்பிள்ளைஎன்பவர் விருத்தாப்பியநோய்கண்டு அந்தியதேவதிரவிய அனுமானங்களைக் குறைவறப்பெற்றுச் சென்ற 6-ந்திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-30 மணியளவில் படைத்தோன்கரத்திலே தமதுஆன்மாவை ஒப்படைத்து மரணத்திரையில் மறையலாயினர். மரிக்கும்போது இவருக்குவயது 86. இவரின் பிரேதமானது மறுநாட் சாயந்தரம் அழகியசித்திரவேலைப்பாடு அமைந்தபேழையில் வைக்கப்பெற்றுத் திரளானஇனசனர், சிநேகிதர்புடைசூழ வண. J. அல்போன்ஸ் சுவாமியாரின் தலைமையிலே வண. பி. நீக்கலஸ்சுவாமியார் திக்கசங்கீதம்பாடிக் கடைசி ஆசீர்வாதம் கூறிநிற்கச் சேமக்காலையில் நல்லடக்கஞ்செய்யப்படலாயிற்று. இவருடைய ஆத்துமஇளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

R. I. P.

லூ. ம.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

சித்திரைமாதம் 1951

| | | | |
|---|---|---|---|
| வெ | 13 | அர்ச். எர்மனெஜில்தப்பர் | (சி) |
| சனி | 14 | அர்ச். யூஸ்தினப்பர் | (சி) |
| ஞா | 15 | கர்த். உத். பின் 3-ம் ஞாயிறு —அர்ச். அனஸ்தாசியம்மாள் | (வெ) |
| திங் | 16 | அர்ச். சுவக்கீன் | (வெ) |
| செ | 17 | அர்ச். அனிசேத்தப்பர் | (வெ) |
| புத | 18 | அர்ச். எலவுத்தேரியார் | (வெ) |
| வியா | 19 | 9-ம் சிங்கராயர் | (வெ) |


# சத்தியவேத பாதுகாவலன்

1951-ம் ஆண்டு
சித்திரைமாதம் 12-ந் திகதி


## தமிழ்த் திருவிழா

நிகழும் சித்திரைமாதம் 27-ம், 28-ம், 29-ம்திகதிகளிலே யாழ்ப்பாணம், பரமேஸ்வரக்கல்லூரி மைதானத்திலே தமிழ்த்திருவிழா பெரிதும்ஆடம்பரமாக நடந்தேறவிருக்கும் சுபசெய்தியானது தமிழ்ப்பாஷையைத் தங்கள் தாய்ப்பாஷையாகக் கொண்டுள்ள அனைவருக்குமே பெருமகிழ்வைத் தருமென்பதில் சந்தேகமில்லை. இந்தத்தமிழ்த் திருவிழாவைக் கொண்டாடும் விஷயமாகப் "பாதுகாவல"னின் சென்றவாரஇதழிலே தமிழ்மகன்ஒருவர் எழுதியனுப்பிய அருமையானகட்டுரையைப் பிரசுரித்திருந்தோம். தமிழ்த்திருவிழாவைக் கொண்டாடும்விஷயமாய் அவர்எடுத்துக்காட்டியிருக்கும் ஆணித்தரமான நியாயங்களை ஆராய்வாகவும், மனத் தாராளமாகவும் படிப்பாரெல்லாம் எமது ஈழத்தமிழ்நாட்டிலும் அதனைக்கொண்டாடும் விஷயமாய் இனிமேலும்ஆட்சேபிப்பதற்கு இடமேயில்லை. இத்திருவிழாவுக்குச் செலவிடும் முப்பதினாயிரம்ரூபாவையும் இதிலும் அதிலுமாகச் செலவிடுமிடத்து இன்னுமதிகம் நன்மையாகுமே யெனச் சிலர்—அதிலும் கருமமறிந்தசிலர்—புகார செய்வது பெரும்விநோதமாகும். எமது நாட்டிலேதிருவிழாவென ஒன்று நடைபெறப்போவது இதுதான் முதன்முறையன்று. நமதுஈழத் தமிழுலகம் எத்தனையோ திருவிழாக்களை வருடந்தோறுமே கொண்டாடிவருகின்றது. அவைகளைக்கொண்டாடுவதிலே வருடந்தோறும் எத்தனையோ முப்பதினாயிரம்ரூபா செலவாகின்றதென்பதை எவருமே நன்கறிவர்அன்றோ! அந்தப்பணத்தைக்கொண்டு அந்தக்கலாசாலையையோ, இந்த ஆண்டிகள்மடத்தையோ கட்டினாலென்னவென்று அப்போதுஎழுதித் தங்கள் கைவரிசையைக் காட்ட முன்வராதஇவர்கள் கருமந்தொடங்கியபின்னர்கலகலப்பதெல்லாம் அதனைக்குழப்புவதற்கும், அதனைமுன்னின்று தொடக்கிய தமிழ்ப்பெரியார்களின் கௌரவத்தைக் குறைப்பதற்குமேயல்லாது பிறிதொன்றுக்கும்அல்லவென்றே பலரும்எண்ணுவது அதிசயமன்று. முதன்மூன்று தமிழ்விழாக்களும் இதற்குமுன் பண்டைத்தமிழ் நாடுகளாகிய சேர, சோழ, பாண்டியநாடுகளில் இந்தியதமிழ்மக்களாலே, அமிழ்தினுமினிய நம்தமிழ் மொழிக்குப் பெருமையைஉண்டுபண்ணக்கூடியவகையிலே பெரிதும்அருட்சிக்குரிய விதமாய் நடாத்தப்பட்டன. தற்போது இலங்கையிலே, தமிழ்மொழிக்குத் தாயகம்போன்றுவிளங்கும் யாழ்ப்பாணத்திலே நாலாவது தமிழ்த்திருவிழாவைக் கொண்டாடச் சந்தர்ப்பங்கிடைத்திருப்பதையிட்டுத் தமிழ்மொழிஆர்வமுள்ள—தமிழைத் தங்கள்தாய்ப் பாஷையாகக்கொண்டுள்ள எவர்தான் குதூகலங்கொள்ளாதிருப்பர்? எவர்தான்அதற்குத் தம்மால்ஆனஉதவிகள் செய்யாதிருப்பர்? ஆதலால் வரப்போகும் தமிழ்த்திருவிழாவை மகிழ்வுடன் எதிர்பார்ப்போமாக! தமிழ்அன்னைக்குப்பெருமையுண்டாக்கக்கூடிய சிறந்தமுறையிலே அதனைக்கொண்டாடப்பேருதவி செய்வோமாக!

## சுதேசவர்த்தமானம்

### நன்மரணயத்தசபை

யாழ்ப்பாண ஆசனக்கோயிலைச் சேர்ந்த நன்மரணபத்தசபையார் தங்கள் பரலோகபாதுகாவலரான அர்ச். சூசையப்பரின் அடைக்கலத்திருநாளை வருகிற 15-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை முன்போலக் கொண்டாடுவார்கள். அதற்குமுந்திய திரிதின உற்சவங்கள் இன்றுவியாழக்கிழமை ஆரம்பமாகும்.

### வின்சென்ற் டீ போல் சபை

யாழ்ப்பாணம், சென்வின்சென்ற் டீ போல்தருமசபைப்பந்திகளின் 1951-ம் ஆண்டிற்கான முதலாவது கால்வருடப் பொதுக்கூட்டம் அடுத்துவரும் 15-4-51 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5-00 மணிக்குச் சஞ்சூசையப்பர்கூட்டச்சாலையில் தனிச்சங்கஅக்கிராசனர் திரு. ஆர். ஜே. போல்அவர்கள்தலைமையில் ஆரம்பமாகி நடந்தேறும். அவ்வேளை அதிவண. எஸ். இம்மனுவேல் சுவாமியவர்கள் "தருமத்தின் மேன்மை"யைப்பற்றிஓர்சொற்பொழிவாற்றுவார். எல்லாப்பந்திகளின் அங்கத்தவர்களும், அபிமானிகளும் சமுகம் அளிக்குமாறு தயவாக வேண்டப்படுகின்றார்கள்.

***********************

### நம்மேற்றிராணியாண்டவர்

நம்மேற்றிராணியாண்டவர்அவர்கள் இம்மாசம் 14-ந்திகதி சனிக்கிழமை முதல் அடுத்த 22-ந்திகதி ஞாயிற்றுக்கிழமைவரையிலே தமதுஞானகடமைகளில் ஈடுபட்டு யாழ்ப்பாணத்துக்கு வெளியே தங்கியிருப்பார்கள்.

**************************

### புதிய நோவிஸ் மாஸ்றர்

இலங்கையிலுள்ள அமலோற்பவ மரியநாயகிசபைச் சிரேஷ்டசுவாமியவர்கள் கழுத்துறையில்இருந்துவரும் அமலோற்பவிசபை நவசந்நியாசமடத்தின் நொவிஸ்மாஸ்றராக வண. பி. செல்மர் சுவாமியாரை நியமனஞ்செய்திருக்கிறார். இவர் 1948-ம்ஆண்டு கார்த்திகைமுதல் கொழும்பு அதிமேற்றிராசன புரோக்கியூறேற்றர் ஜெனறலாய் இருந்துவந்தார்.

### அர்ச். சூசையப்பர் பந்தி

யாழ்ப்பாணம், சென்வின்சென்ற் டீ போல்சபை, அர்ச். சூசையப்பர்பந்தியின் வருடாந்தபொதுக்கூட்டம் சென்ற 8-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை சாயந்தரம் சற்பிரசாதஆசீர்வாதத்தின்பின் சென்சாள்ஸ் பாடசாலை மண்டபத்தில் நடந்தேறியது. பலாலிஅரசினர் ஆசிரியகல்லூரிஅதிபர் திரு. பி. சவிரிமுத்து அவர்கள் தலைமைவகித்தனர். காரியதரிசியால் 1950-ம்ஆண்டின்அறிக்கை வாசிக்கப்பட்டபின் தனாதிகாரி பந்தியின் வரவுசெலவுக் கணக்குகளை வாசித்துக்காட்டினர். பந்தியின்அறிக்கைபற்றி ஆசிரியர் எல். கிறேஷியன்அவர்கள் குறிப்புரைகூறினர். அப்பால் பாதுகாவலன் பத்திரிகாசிரியர்அவர்கள் தேம்பாவணியை ஆதாரமாகக்கொண்டு தருமசிந்தையைப்பற்றி ஓர்இனியசொற்பொழிவு நிகழ்த்தினர். அதைத்தொடர்ந்து செவாலியர் S. அருளானந்தம் அவர்கள் தருமத்தின் அவசியத்தையும், தருமமனப்பான்மையுள்ளோரின் சித்திகரமான ஈடேற்றத்தையும்பற்றிப் பேசினர். பின்னர் அக்கிராசனர் பேசியபோது, தருமதொண்டின் உயர்வையும், தருமம்செய்யும்போது இருக்கவேண்டிய நோக்கத்தையும்பற்றிக் குறிப்பிட்டார். ஈற்றில் பந்தியின் தலைவரது நன்றித்துதியுடன் கூட்டம் இனிதே நிறைந்தது.

### இராமநாதன்நூற்றாண்டுவிழா

சேர்பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் நூறும்ஆண்டு ஜனனவிழாவை இம்மாதம் 16-ந்திகதி கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் நோக்கமாக யாழ்ப்பாணநகரசங்க கம்மிற்றிச்சாலையிலே மேயர் சி. பொன்னம்பலம் அவர்கள்தலைமையில் சென்றசனிக்கிழமை ஓர்கூட்டம்நடந்தேறியது. அதிலே சேர் இராமநாதனின் ஞாபகமாக அவரின் உருவச்சிலைஒன்றை யாழ்ப்பாணத்தில் நிறுவுதற்கான தீர்மானத்தை ஆதரிப்பதென்தென்றும், இம்மாதம் 22-ந்திகதி யாழ்ப்பாணமேயர் தலைமையிலே நகரமடண்பத்தில் ஓர் ஞாபக பகிரங்கக்கூட்டத்தை நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

நிகழும்சித்திரைமாதம் 16-ந்திகதியன்று சேர் இராமநாதன்பிறந்த நூற்றாண்டுவிழாக் கொண்டாட்டத்தை முன்னிட்டுக் கொழும்பிலே பிரதிநிதிகள் சபாமண்டப மைதானத்தில் ஓர் பகிரங்ககூட்டம் நடந்தேறும். பெருந்தேசாபிமானியும், அரசியல் ஞானியுமான சேர் பொன்னம்பலம் இராமநாதன்அவர்கள்பிறந்த நூறும் ஆண்டுநிறைவுவிழாவை ஞாபகப்படுத்தி நடத்தும்கொண்டாட்டத்தைஒழுங்குபடுத்துதற்கான கம்மிற்றியின்தலைவராக உள்நாட்டுமந்திரியாரான சேர் ஒலிவர் குணதிலகஅவர்கள் நியமனஞ் செய்யப்பெற்றிருக்கின்றார்.

### நகரசங்கமும் கோறமும்

தமக்குஅளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்பேரிலே, யாழ்ப்பாண நகரசங்கத்தின்கோறத்தை எட்டாகவிதிப்பதற்குத் தலதாபனமந்திரியார் பிரதிநிதிகள்சபையினதும், செனற்சபையினதும் அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டனர். அதனால் யாழ்ப்பாணநகரசங்கத்தின் விருப்புக்குமாறாய் அதன் கோறம் எட்டாகக்குறைக்கப்பட்டிருக்கிறது.

### ஊர்காவற்றுறையும் தண்ணீரும்

ஊர்காவற்றுறைக்குக் குழாய்த்தண்ணீர்உதவும்திட்டவேலை நடைபெற்றுக் கொண்டுவருகிறது. இதற்கென அரசினர் சென்றவருடம் நான்குலட்சம் ரூபா விட்டிருந்தனர். நாரந்தனையிலே தண்ணீர்உதவும் தடாகமாக ஒன்றோடொன்று இணைந்தனவாய் ஏழுகிணறுகள்தோண்டும்வேலையும், ஊர்காவற்றுறைச்சந்தைக்குச் சமீபமாக மூவாயிரம்கலன் தண்ணீர்கொள்ளக்கூடிய தாங்கியை உயரஅமைக்கும்வேலையும் தற்போது நடைபெற்றுவருகின்றன. தண்ணீர்க்குழாய்கள் கிடையாமையாலே குறித்தகாலத்துள் வேலையை முடித்துக்கொள்ள முடியாதிருப்பதாக ஒப்பந்தகாரரின் பிரதிநிதிஒருவர் தெரிவித்திருக்கின்றார்.

### பாப்பரசரின் மகிமைவிருது

மின்னேரியாப்பகுதியைச் சேர்ந்த ஹிங்குருக்கொடை விசாரணைப்பங்கிலே சென்ற பங்குனிமாதம் 31-ந்திகதி சனிவாரம் ஓர்பெருங்குதூகலதினமாய் இருந்தது. அங்கே ஓர்கத்தோலிக்க பிரமுகராய்விளங்கும் ஸ்ரீ மிகுவேல் டி சொய்சா அவர்கள் பரிசுத்தபாப்பாசர் தமக்குச்சங்மானித்த "பெனெமெறென்றி மெடல்" எனும் மகிமைவிருதை அன்றையத்தினம் திரிகோணமலை மேற்றிராணியாரான மகாவந். இக்னேஷஸ் கிளென்னி ஆண்டவரின்கரங்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாயினர். ஆண்டவர்அவர்கள் அங்குசெய்த பிரசங்கத்திலே, கட்டளைக்குருவானவருக்குச் செய்யக்கூடிய ஒத்தாசையெல்லாம் எப்போதுமேசெய்துவந்த விசேஷப்பட்ட ஓர்கத்தோலிக்க பெருமகனுக்குச் சங்மானிக்கப்பெற்ற கௌரவத்தையிட்டுத் தமக்குண்டான பெருமகிழ்வைத் தெரிவித்துக்கொண்டார். ஹிங்குருக்கொடை ஓர்பெருங்காடாயிருந்தகாலத்திலே காலந்தோறும் அவ்விசாரணைப்பங்கைத் தரிசித்துவந்த குருமாருக்கு இல்லிடமும், போசனமும்அளித்து உபசரித்துவந்தவர் மகிமைவிருதுபெற்றுள்ள இந்தக்கத்தோலிக்க பிரமுகரேயென்றும், பின்னர் நிரந்தரமான கட்டளைக்குருமார் நியமனஞ்செய்யப்பெற்றபோது இவர் கூடியமட்டும் எல்லாவழியாலும் அவர்களுக்குத் துணைச்செய்துவந்தாரென்றும் தெரிவித்துநின்றார். சற்பிரசாத ஆசீர்வாதத்தின்பின் நடைபெற்ற ஓர் வரவேற்புவிழாவுக்குப் பெருந்தொகையானோர் சமுகமளித்திருந்தனர். அவ்வேளை ஸ்ரீ மிகுவேல் டி சொய்சா அவர்களின் உதாரகுணத்தையும், ஈகையையும் அநேகர்பாராட்டிப் பேசினார்கள்.

### நகர்களும் குழாய்த் தண்ணீரும்

இலங்கைமுழுவதிலும் குழாய்மூலம் சுத்தமான நல்லகுடிதண்ணீர் உதவுவதானது இனிமேலும் தாமதமில்லாமல் உடனேதானே நிறைவேற்றிவைக்கப்படுதற்கான திட்டம்ஒன்றைச் சுகாதார-தலதாபனமந்திரி காரியாலயம் மந்திரிசபைக்குச் சிபாரிசுசெய்திருக்கின்றது. மந்திரிசபை இதனை அங்கீகரிக்குமிடத்து அநேகவருடகாலமாகக் குழாய்மூலம் குடிதண்ணீருக்கு ஓலமிட்டுக்கொண்டிருக்கின்றமாகாண தலைப்பட்டணங்கள் நன்மையடைவனவாகும். இப்பட்டணங்களிலே கண்டி, யாழ்ப்பாணம், காலி என்பனவும் அடங்கும்.

### பிரசாஉரிமைபெற்றவர்கள்

இலங்கைப்பாராளுமன்றப் பிரதிநிதிகளாய் இருந்துவருகின்ற இந்தியகாங்கிரஸ்அங்கத்தவர்கள் ஏழுபேருள்ஆறுபேரும் தற்போதுஇலங்கைப் பிரசாஉரிமையைப் பெற்றுவிட்டார்கள். இவர்களில்நால்வர் பிதிரார்ச்சித உரிமைகொண்டும், ஏனையஇருவரும் தங்களைப்பதிவுசெய்தும் அதனைப்பெற்றுக் கொண்டார்கள். பாராளுமன்றத்திலுள்ள இந்தியகாங்கிரஸ் அங்கத்தவருள் நுவரெலிப் பிரதிநிதியான திரு. தொண்டமான்அவர்கள் ஒருவரே இன்னமும் பதிவுசெய்யப்படவில்லை. பதிவுசெய்து பிரசாஉரிமைபெற்ற முதல்இந்திய காங்கிரஸ்பிரதிநிதி திரு. ஏ. அசீஸ் அவர்களே.

### பிரவேசப் பரீட்சை

## ஆயத்த வகுப்பு

1951-ம் ஆண்டு ஆனிமாதக் கடைசிப்பகுதியில் நடக்கவிருக்கும் ஆசிரியகலாசாலைப் பிரவேசப்பரீட்சைக்கான ஆயத்த வகுப்பு கொழும்புத்துறைத் தாபனத்தில் 18-4-51 புதன் கிழமை ஆரம்பமாகும். விரும்புவோர் இதில் சேர்ந்து படிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் திருவிழா

யாழ்ப்பாணத்திலே இம்மாதம் நடைபெறவிருக்கும் தமிழ்த்திருவிழாவைப்பற்றி நாம் விரித்துரைக்க வேண்டியதில்லை. சேர, சோழ, பாண்டிய நாடுகளில் முறையே சென்ற மூன்றாண்டுகளிலும் நடாத்தப்பட்ட இவ்விழா, இம்முறை ஈழநாட்டில் விளங்கும் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவேண்டிய ஒழுங்குகளும், ஆயத்தங்களும் செய்தாகின்றன. தமிழ் மக்களாயுள்ளோர்க்கு இவ்விழா பெரிதும்ஊக்கத்தையும், ஆர்வத்தையுங் கொடுப்பதாகும். இலங்கையில் வசிக்கும் தமிழர் தமிழ்விருத்தியில் தென்னிந்திய சகோதரர்கட்கு எத்துணையுங் குறைந்தவரல்லர் என்பதைக் காட்டும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. எனவே, இவ்விழா சகல வைபவங்களுடனும் இனிதுநடந்தேறத் தமிழ்மக்களாயுள்ளார் யாவரும் ஒற்றுமையுடன் மிக்க அக்கறைகாட்டி உழைக்க வேண்டும். இவ்விழாவினைக் குறைவின்றிச் சிறப்புடன் நடத்திமுடிக்கப்போதிய பணம் வேண்டும். தமிழுகைவுள்ள ஒவ்வொருவனும், இந்தப்பெருமுயற்சிக்குத் தாராளமாகப் பொருளுதவிசெய்வது பெருங்கடமையாகும். இந்தியாவினின்று பெருந்தொகையாகத் தமிழ்வித்துவான்களும் இரசிகர்களும் வருகின்றனர். அவர்களை ஏற்றமுறையில் வரவேற்று உபசரிப்பது யாழ்ப்பாணமக்கள் ஒவ்வொருவரது பிரதம கடமையாகும். தமிழ்மக்களாயுள்ளோர் தமது தொன்மையை மறவாது அதற்கேற்ப முன்னேற்றமடைய வழிகாண்பது அவசியமென்பதை எவரும் மறுக்கமாட்டார். இவ்விழா யாவர்க்கும் புத்துயிரளித்து மனரம்மியத்தை உண்டாக்குமென்பதிற் சந்தேகமில்லை. எனவே, தமிழராக உள்ளார் யாவரும் முன்வந்து இயன்ற சரீரஉதவியும், பொருளுதவியும் வழங்கி ஈழநாட்டின் கௌரவத்தைப் பாதுகாப்பாராக.

### கலைக்காட்சி: ஓர்வேண்டுகோள்

தமிழ்த் திருவிழா இம்மாதம் 27, 28, 29-ந்திகதிகளில் யாழ்ப்பாணம் பரமேஸ்வரக் கல்லூரியிற் கவின்பெற அமைக்கப்பெறும் பந்தரில் நடைபெறும். இவ்விழாவை முன்னிட்டுக்காட்சிப்பகுதி ஒன்றினைச் சித்திரவித்தியாதரிசி திரு. எஸ். ஆர். கனகசபை அவர்கள் ஒழுங்குசெய்து வருகின்றார். இக்காட்சிக்குத் தமிழரின் பழங்காலத்து நகைகள், சிற்பவடிவங்கள், அரியஏடுகள், புத்தகங்கள், கண்டெடுக்கப்பட்ட புதைபொருள்களின் புகைப்படப் பிரதிகள், பழையநாணயங்கள், விழாக்காலங்களில் உபயோகிக்கப்படும் முக்கியபொருள்கள், பழையகாலத்துச் சேலைகள், உடைகள் என்பன வேண்டியுள்ளன. இவற்றை வைத்திருப்பவர்கள் கோப்பாயில் வதியும் திரு. எஸ். ஆர். கனகசபை அவர்களுக்கு விபரங்களுடன் எழுதி அவற்றைக் காட்சிக்கு அனுப்புவதற்கான ஒழுங்குகளைச் செய்துகொள்ளலாம். விழா முடிவடைந்தபின்னர் அன்பர்களிடமிருந்து காட்சிக்கெனக் கிடைக்கும் பொருள்கள் திருப்பியனுப்பி வைக்கப்படும்.

### தமிழர்கலை

இக்காட்சியிலே தமிழர்கலைப் பகுதியைச் சென்னை திரு. வி. எம். நரசிம்மன் அவர்கள் ஒழுங்குசெய்ய ஒப்புக்கொண்டுள்ளார். இவர் தென்னிந்திய புராதன நாகரிகச் சின்னங்களின் ஆராய்ச்சி நிபுணராகவும், சிற்பக்கலைக்கோயில்களின் அமைப்புகளிலே தேர்ச்சிபெற்றவராகவும் விளங்குகின்றார். கலைக்காட்சியின் சிறப்புக்குத் தமிழ்அன்பர்களின் ஒத்துழைப்பும், உதவியும் பெரிதும் வேண்டப்படுகின்றன.

### சொற்பொழிவுகள்

இலக்கியம், சரித்திரம், விஞ்ஞானம்பற்றிய துறைகளிற் பேரறிஞர்கள் பலர் சொற்பொழிவாற்றுவார்கள். தென்னிந்தியாவிலிருந்து பின்வரும் பேரறிஞர்கள் விஜயம் செய்து சொற்பொழிவுகள் ஆற்றுவார்கள்: தமிழ்ப்பேராசிரியர் திரு. ரா·பி. சேதுப்பிள்ளை, டக்ரர் மு. வரதராசனர், பேராசிரியர் அ. ஸ்ரீநிவாசராகவன், பேராசிரியர் சேஷாத்திரி, ஸ்ரீமதி இராஜேஸ்வரி அம்மாள், சிவஞான கிராமணியார், அனந்த வைத்தியநாதையர், பேராசிரியர் மீனாட்சிசுந்தரனர், டக்ரர் கிருஷ்ணன், பேராசிரியர் சி. எஸ். ஸ்ரீநிவாசாச்சாரியார், கலைவிமர்சகர் ஜி. வேங்கடாசலம்.

### விழா நிகழ்ச்சிகள்

தமிழ்த் திருவிழாவுக்கு அனைவரும் அழைக்கப்படுகின்றனர். சொற்பொழிவுகள், கலைக்காட்சிகள்போன்ற சகலநிகழ்ச்சிகளையும் அனைவரும் எவ்வித பிரவேசக் கட்டணமுமின்றிக் கேட்டும், பார்த்தும் அனுபவிக்கலாம். தமிழ்விழாவுக்கு ஆதரவளிப்பதற்கென வடமராட்சிப் பகுதியிலுள்ள சகலகிராமங்களையுஞ்சேர்ந்த தமிழ்ப்பண்டிதர்களும், ஆசிரியர்களும், மற்றும் பிரமுகர்களும்அடங்கிய ஆலோசனைக்கூட்டமொன்று புலோலி வாசிகசாலையில் 1-4-51 மாலை 5 மணிக்கு நடைபெற்றது. திரு. ரீ. இராமலிங்கம், எம். பி. அவர்கள் தலைமைவகித்தனர். தமிழ்விழாச்செயலாளர் திரு. க. நவரத்தினம் அவர்களும், தனதிகாரி டக்ரர் குருசாமி அவர்களும் விழாஒழுங்குகளைப் பற்றிப்பேசினர்கள். வழக்கறிஞர் தனபாலசிங்கம் அவர்கள் எழுந்து விழாவுக்கு வடமராட்சி மக்கள் பூரண ஆதரவளிக்க வேண்டுமெனக் கூறினர். பின்னர் ஒரு நிர்வாகசபை தெரிவுசெய்யப்பட்டது. தலைவர் திரு. ரீ. இராமலிங்கம், எம். பி., உபதலைவர் முதலியார் சுப்பிரமணியம், காரியதரிசி எஸ். ஆர். கந்தசாமி, தனதிகாரி திரு. சின்னையா. நிர்வாகசபைஅங்கத்தினரும் தெரிவுசெய்யப்பட்டனர். குறைந்தபட்சம் 2,000 ரூபாவாவதுதிரட்டித் தமிழ்விழாவுக்கு உதவுவதென்றும், மற்றும்வேண்டிய உதவிகளை அளிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

### அனுராதபுரம்

சமீபத்திலே அனுராதபுரத்திலுள்ள விவேகானந்த வித்தியாலயப் பரிசளிப்புக்கூட்டம் திரு. எம். ஸ்ரீகந்தா, சி. சி. எஸ். அவர்களின் தலைமையிற்சென்ற 30-3-51-இல் நடைபெற்றது. முதலியார் எஸ். சின்னத்தம்பி அவர்களும், திரு. ச. அம்பிகைபாகன் அவர்களும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் தமிழ்விழாவைப்பற்றிப் பேசினர்கள். விழாவுக்கு நிதிதிரட்டுவதற்காக முடிக்குரிய வழக்கறிஞர் எஸ். நடராசா அவர்களைத் தலைவராகக்கொண்ட ஒரு நிர்வாகசபை அமைக்கப்பட்டுள்ளது.

### திரிகோணமலை

யாழ்ப்பாணத்திலே நடக்கவிருக்கும் தமிழ்விழா விஷயமாகத் திரிகோணமலையிலே சென்ற 31-3-51 சனிக்கிழமை திரு எஸ். சிவபாலன், எம். பி. அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தமிழ்விழாவின் நோக்கத்தைப் பற்றித் தமிழ்விழாக் காரியதரிசி முதலியார் எஸ். சின்னத்தம்பி அவர்களும், திரு. எஸ். சிவபாலன் அவர்களும் சொற்பொழிவாற்றித் தமிழ் பேசும் மக்களின் ஆதரவை வேண்டிநின்றார்கள். பின்னர் திரு. எஸ். சிவபாலன் அவர்களைத் தலைவராகவும், திரு. ஐ. சரவணமுத்து அவர்களைக் காரியதரிசியாகவும், திரு. எஸ். முத்துக்குமாரு அவர்களைத் தனதிகாரியாகவும், இன்னும் எட்டுப்பேரை அங்கத்தவர்களாயும்கொண்ட நிர்வாகசபையொன்று சபையோரால் தெரிவுசெய்யப்பட்டது. நிதிதிரட்டும்பணி நடைபெற்றுவருகிறது.

---

### மிளகாய் வரத்து

சென்னையிலிருந்து இலங்கைக்குக் கப்பலொன்றிலே அனுப்பிவைக்கப்பட்ட சுமார் பதினாயிரம்மூடை செத்தல்மிளகாய் சென்றவியாழக்கிழமை கொழும்பு வந்துசேர்ந்து, கரையில்இறக்கப்பெற்றுச் சிங்கள—தமிழ் வருஷப்பிறப்பையிட்டு ஆங்காங்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சித்திரை 1-ந்திகதிதொடக்கம் 400தொன் செத்தல்மிளகாய் இலங்கைக்கு ஏற்றுமதிசெய்வதற்குச் சென்னைஅரசாங்கம் அனுமதித்திருக்கிறது. அதில் இந்தப்பதினாயிரம்மூடையும் ஓர்பகுதியாகும்.

### புதிய டக்ரர்மார்

இலங்கைச்சர்வகலாசாலையின் வைத்தியபரீட்சைகள் சென்றமாதம்நிகழ்ந்து அதன்விளைவாய் மூன்றுபெண்மணிகள் உட்பட 28 பேர் புதிய டக்ரர்மாராய் அரங்கேறியிருக்கின்றனர்.

---

—இந்தியாவிலே கூச்பீகாரின் மகாராஜாவுடைய சகோதரரான இந்திரா ஜித்தேந்திர நாராயண் இளவரசர் சென்றவியாழக்கிழமை டார்சீலிங்கா மாளிகையில் ஏற்பட்ட தீவிபத்தில் அகப்பட்டு உயிரிழந்தாரெனச் செய்தி கிடைத்திருக்கிறது. இந்தத் தீவிபத்தாலே கூச்பீகார்மாளிகை மிகமோசமாகச் சேதமடைந்திருக்கிறது.

### யேசுகைத்தாதை எமக்கும்தாதை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருடைய முதல் அப்போஸ்தலரானர். அவர்விட்ட ஒவ்வொரு மூச்சும் யேசு இரட்சகருக்காகவே. தமதுசீவியம் முழுவதையும் அவருக்கும், அவருடைய மாசில்லாத தாயாருக்குமே பரித்தியாகஞ்செய்தார். இதுவிஷயமாய் இன்னும்அதிகம் விரிவாக எழுதஇடமுண்டு. ஆனல், சுருங்கக்கூறுமிடத்து, தேவனல்அபிஷேகம்பண்ணப்பட்ட ஒவ்வொருகுருவானவரும் அர்ச். சூசையப்பரின் பிரதிபிம்பமேயாம். இன்னொருவிதமாகக்கூறுமிடத்து ஒவ்வொருகுருவானவரும் இன்னொரு சூசைமாதவரே.

தேவன் எங்கட்குத் தந்திருக்கும் இந்தநேசகைத்தாதையின் வல்லபத்திற்கோ வரம்பில்லை. மோட்சமகிமைப்பிரதாபங்களின் மத்தியிலிருந்து எங்கட்காகப் பரிந்துபேசக் கோடானுகோடி சிட்டர்களுண்டு. அர்ச்சியசிஷ்டர்களின் ஐக்கியப்பிரயோசனத்தில்அதுஓர்மாபெரும் பரப்பாகும். மதித்தற்கரிய திரவியமாகும். ஆனல், தேவதாயார் ஒருவரைத்தவிர, பரகதியிலுள்ள மற்றும் எல்லாச் சிட்டர்களினதும் பரிந்துபேசும் வல்லமையையும், பாதுகாவலையும் ஒன்றாகக்கூட்டினலும் அவைகள்யாவும் சூசையப்பரின் வல்லமைக்கும், மகிமைக்கும், பாதுகாவலுக்கும் நிகராகாது என்பது திண்ணம். தேவதாயார் இப்பூவுலகில் சஞ்சரித்திருந்தபோது மாத்திரமல்ல, பரலோகத்திலேயும் இன்றும் சூசைமாதவரின் திருப்பத்தினியாகவே விளங்குகின்றார். யேசு இரட்சகர் மோட்சத்திலேயும் சூசையப்பரைத் தம்மை வளர்த்த அப்பர் என்பதைப் பாராட்டாது விடுவாரா? தேவதாயாரைப்பார்த்து மோட்சத்திலே வேறுஎந்தச்சிட்டர் "எனது நேசபத்தினியே" என்று சொல்லஇயலும்? யேசுஇரட்சகரைப்பார்த்து, தேவதாயாரையும் சூசையப்பரையும்தவிர வேறுஎந்தச்சிட்டர் "என்நேசமகனே"என்று சொல்ல இயலும்?

"எனது மகிமைஉடைத்தான இராக்கினியே! என் நேசபத்தினியே! இந்தப்பாவிக்குத் துணைபுரிவீராக." "நான்ஏந்திவளர்த்த என்தேவனே! என் இரட்சகரே! என்நேசமகனே! இந்தநிர்ப்பாக்கியன்மேல் இரங்கும்"என்று சூசைமாதவர் ஒரு வார்த்தை சொல்லுவாராயின் அதைஅவர்கள் மறுக்கமுடியுமா? மறுக்க மனம்வருமா? இயலுமா? ஆகவே, எங்கள் நேசதாதையாம் யேசுகைத்தாதையின் அடைக்கலத்தை அனவரதமும் இரந்துவேண்டுவோமாக. தேவதாயாருக்கும், ஆண்டவருக்கும் அது மிகவும் உகப்பான காரியமென்பது திண்ணம். ஆகவே "சூசையப்பரிடம் போங்கள்".

சூசைஅப்பு! எங்கள்அப்பு! இப்பொழுதும், எப்பொழுதும் விசேஷமாகஎங்கள்மரணநேரத்திலும் உமதுதிடங்கொண்ட அடைக்கலத்தை எங்களுக்குஈந்தருளத் தயைகூரும்—ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க செய்தி

## எதேச்சாதிகாரக் கொடுமை

பம்பாய்— சித்திரை 4

எதேச்சாதிகாரவழிகளையும், கோட்பாடுகளையும் ஆட்சேபித்துப் பம்பாயில் கூடிய இந்தியகலாசார மகாநாடு இரு தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. "இந்த எதேச்சாதிகாரக் கொடுமை பற்றி நடுநிலைமைவகிப்பதோ, அல்லது அசட்டையாயிருப்பதோ, இந்தியா தனதுபாரம்பரைக கலாசார பண்பாட்டைத் துறப்பதற்கே ஒப்பாகும்" என மகாநாட்டுத்தீர்மானம் எச்சரிக்கிறது. இன்னும் சோவியற் அடிமைத் தொழிற்கூடங்களைக் கண்டித்து ஒரு தீர்மானமும் நிறைவேற்றியது. "மக்கள்குலமாண்பை அறவே புறக்கணிக்கும்அமைப்பே அடிமைத் தொழில் முகாம்கள் வைத்துநடத்துவது" என்று இத்தீர்மானம் சொல்லியது. ஐ. நா. ஸ்தாபனமும், ஏனையசமூகசேவைஸ்தாபனங்களும், இந்த அடிமைத்தொழில் முகாம்முறையைநீக்க உலகஅபிப்பிராயத்தை ஒன்றுதிரட்டவேண்டும் என்னும் அதேதீர்மானம் கோரியது.

கம்யூனிஸ்தாக்கள்கதைக்கும் "விடுதலைஇயக்கம்" வரும்போது உலகிலே கலாசாரவிடுதலை காரிருளில் தள்ளுண்டுவிடும் என்று இந்திய எழுத்தாளர் பி. வை. தேஷ்பாண்டே (இந்திய எம். பி.) தமதுபேச்சில் எச்சரித்தார். ஜனநாயகநாடுகளின் பக்கத்தில்தான் இந்தியாஇருக்கமுடியும். ஏனெனில், இந்தியர்கள்நம்பும் விடுதலை, சத்தியம் ஆகிய கொள்கைகளையே ஜனநாயக நாடுகள் கடைப்பிடிக்கின்றன என்று இந்தியஆசிரியர் ராஜா ராவ் அவர்கள் மகாநாட்டிற்பேசுங்கால் குறிப்பிட்டார்.

விடுதலையா? கொடுங்கோலா? இரண்டில்ஒன்றைத் தெரிவுசெய்ய வேண்டிய இம்முக்கியதருணத்தில் வழவழாவென்று இருக்கமுடியாது என்று மகாநாட்டிற்பேசிய அமெரிக்க சோஷலிஸ்ற்தலைவர் நோர்மன் தோமஸ்அவர்கள் அழுத்தந் திருத்தமாகஎடுத்துரைத்தார். ஸ்ராலினின் கம்யூனிஸ்த ஏகாதிபத்தியத்தைத் தாம் வெறுப்பதன்காரணத்தை விளக்குங்கால், "மக்கள்தேவைகளுக்கு— அதாவது விடுதலை, சமாதானம், வாழ்க்கை வசதிநிறைவு ஆகியவற்றிற்கு — முதல் மதிப்புக்கொடுக்கும் உருப்படியான திட்டமே தற்போது அத்தியாவசியப்படுகிறது. ஸ்ராலினின் கம்யூனிஸத்திலே இந்தஅம்சம் பூச்சியம்" என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சோவியற் அடிமைத்தொழில்முகாமில் ஐந்துஆண்டுகள்இருந்த ஜூலியஸ் மார்க்கோலின் (இஸ்ரூயேல்) பேசுகையில், "அடிமைத் தொழில் முறைச் சாபத்தீடு தொடர்ந்து இருக்கச்செய்வது நமதுவிடுதலைக்கே சகிக்கவொண்ணாத இழுக்கு" என்றார்.

## தீவிபத்துக்கு முதல்சிகிச்சை

வாஷிங்ரன் — சித்திரை 4

தீவிபத்துக்களினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கும், இதர விபத்துக்களில் கடுங்காயமுற்றோருக்கும் பயன்தரும் முதல்சிகிச்சை விபரமொன்று அமெரிக்கசுகாதார பகுதியினாலும், மற்றுமுள்ள தனிப்பட்ட சுகாதார ஸ்தாபனங்களினாலும் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. உடல் அதிர்ச்சியைநிறுத்தி, உயிரைக்காக்க இரத்தநீர் (பிளாஸ்மா) ஊட்டும் சிகிச்சைக்கு இது நிகரானதாம். கடுமையானகாயம் ஏற்படும்போது உடம்பு முழுதும் அதிர்ச்சி அடைகிறது. உயிர்த்திரவம் கசிந்து ஓடிவிடுகிறது. இந்த உயிர்த்திரவத்தை மீண்டும் உட்புகுத்தினால்தான் எவரும்பிழைப்பார்.

இந்த உயிர்த்திரவம் உப்புமயமானது. எனவே, விபத்தில்சிக்கியவருக்கு உடனேதரவேண்டிய முதல் சிகிச்சை இதுதான்: இரண்டுபைந்சலத்தில் ஒருதேக்கரண்டி உப்பையும், அரைத்தேக்கரண்டி அப்பச்சோடாவையும்கரைத்து உடனே நோயாளிக்குக் குடிக்கக்கொடுங்கள். இம்மாதிரி 24 மணித்தியாலத்திற்குள் 20 பைந் உப்பு—சோடா சலம் பருகச் செய்ய வேண்டும். உப்பு—சோடாக்கலவை இங்குசொன்ன அளவில்இருக்கவேண்டும். கூடினால், வயிற்றுக்குக் கெடுதியுண்டாகும். குறைந்தாலோ, நோயாளிக்குவேண்டிய உயிர்த்திரவம் கிடைக்காது. டக்றருக்கு முதலில் சொல்லி அனுப்புவதை மறக்கவேண்டாம்.

## சோவியற் 'வீற்றோ' பிரயோகம்

வாஷிங்ரன் — சித்திரை 5

ஐ. நா. மகாசபையிலே சுதந்திர நாடுகள் அங்கத்துவம்பெறுவதற்கு வழியைமறித்துக்கொண்டு வருவது சோவியற்அரசேயாகும். பாதுகாப்புச்சபையிலே ரூஷியா 'வீற்றோ' (ரத்துஅதிகாரம்) வீசிச் சுதந்திரநாடுகளின் அபிலாஷை நிறைவேறவொண்ணாமல் செய்துவருகிறது. பாதுகாப்புச்சபையின் சிபாரிசின்பேரில் தான் ஐ. நா. பொதுமன்றம் ஒருநாட்டை அங்கத்தினராக அங்கீகரிக்கவேண்டியிருக்கிறது. "இந்த நிலைமையில் சோவியற் 'வீற்றோ' சகிக்கமுடியாததாகியுள்ளது. சுதந்திரநாடுகள் ஐ.நா. மகாசபையிற்சேரக் காரியசாத்தியமான வழியொன்றை ஐ. நா. மகாசபை சீக்கிரமே காணவேண்டும்" என்று அமெரிக்கஐக்கியதேச விசேட ஸ்தானீகர் ஜோண் பாஸ்றர் டல்லஸ் கூறுகிறார்.

(யூஸிஸ்)

# மாதோட்டத் தபால்

(நாட்டுத்தூதன்)

ஐயா! அரசினர் ஏழைக்குடிகள் மீதுகொண்டுள்ள அனுதாபமிகுதியால் அள்ளிவீசிய சகாய வேலைப்பணத்தில் பெரும்பகுதி மதுக்கடைகளையே தஞ்சமடைகின்றதாம். அதனால் இதுவும் ஓர் நவீன மதுவிலக்குத்தானும், இப்பகுதியிலுள்ள மதுவிலக்குப் போன்ற ஓர் போலிமதுவிலக்கு வேறெப்பகுதியிலும் உண்டாகப்படாதென்பதே தூதனின்வேண்டுகோளாம். விடத்தல்தீவில் திரு. அடைக்கலம் என்பவர் ஓர்சிறந்த மேஸ்திரியாராகத் திகழ்கின்றாராம். இவரால் சமீபத்தில் செய்யப்பட்ட திருக்கல்லறைச் சுரூபமே இதற்குப்போதிய சான்றாகுமாம்.

**மன்னார்ப் பட்டினசங்கம்:** சமீபத்திலே தூதன் பலவிதசுற்றோட்டங்கள் நடத்தினான். அதன்பயனை மன்னார்ப்பட்டினத்தின் மறுமலர்ச்சியை மனதிற்கொண்டு மனமகிழ்ச்சியுற்றான். பிரதானதெருக்களும், குறுக்குத்தெருக்களும், ஒழுங்கைகளும், மலசலகூடங்களும் போதியளவு திருத்தமடைந்து விளங்குவதோடு, மன்னார்ப் புகையிரதஸ்தானமும் பிரத்தியேக மின்சாரதீபத்தினால் இலங்கிக்கொண்டிருந்ததாம். இவற்றிற்கெல்லாம் அடிப்படையான காரணம், மன்னார்ப் பட்டினசங்க தலைவர் திரு. பொன்ராசாஅவர்களின் அயரா முயற்சிதானும். இப்பெரியார் இன்னும் பலவருடகாலம் தலைவராயிருந்துவரின் மன்னார்ப்பட்டினம் தலைசிறந்த நகரமாக விளங்குமென்பதில் சந்தேகமில்லையாம். அம்மட்டா, திரு. பொன்ராசாஅவர்கள் பிரதான மந்திரிமார்களான சேர் ஜோண் கொத்தலாவல, திரு. பண்டாரநாயகா, திரு. டட்லி சேனநாயக ஆகியோரின் அனுதாபத்தையும் பெற்றுவருவது ஈண்டு குறிப்பிடற்பாலதாகும்.

**மந்திரி பண்டாரநாயகா:** வைத்திய - சுகாதார மந்திரியாரான திரு. பண்டாரநாயகாஅவர்கள் மந்திரி சிற்றம்பலம் அவர்கள் சமேதராகச் சமீபத்திலே மன்னார்ப்பகுதியில் ஓர் சுருதியான சுற்றோட்டம் நடத்திப் போயிருக்கிறாராம். அவரது தரிசனையின்போது நிகழ்ந்த விசேஷசம்பவம் யாதெனில், இப்பகுதியிலுள்ள ஆயுர்வேதவைத்தியர்கள் இருகட்சிகளாகப் பிரிந்துநின்றமைதானும். மந்திரியார் ஒருகட்சியைஆதரித்து, மறுகட்சியைப் புறக்கணித்துச் சென்றாரென வெளியிலே பேசிக்கொள்ளுகின்றனராம்.

**அடம்பன் ஆஸ்பத்திரி:** சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் கூடியே அடம்பனில் ஓர் சிவில்ஆஸ்பத்திரி இருந்துவந்ததைச் சகலரும் நன்கறிவர். இது மன்னார்ப்பட்டினத்திலுள்ள ஆஸ்பத்திரியிலும்பார்க்க ஓர்காலத்தில் பிரஸ்தாபம் பெற்றிருந்ததென்பதை எவரும் மறுக்கமுடியாது. இதன் உண்மையை மன்னாரிலிருந்து இங்குவந்து சிகிச்சைபெற்றுப்போன நோயாளிகளின்தொகையே நன்கு அத்தாட்சிப்படுத்துவதாம். அதனால் இதற்கு அன்றுதொட்டு "மன்தோட்டா சிவில் ஆஸ்பத்திரி" என நாமம் சூட்டப்பட்டிருந்தது. இதன் உண்மையை இப்போதும் எழுத்துப் பிரதிகளில் கண்டுதெளியலாம். இப்படியான பெரியஆஸ்பத்திரியை மந்திரி பண்டாரநாயகா ஓர் மருந்துச்சாலையாகமட்டும் மாற்றியமைக்கத் திட்டம் போட்டிருப்பது எத்துணை விபரீத செயலாகும். அம்மம்ம! இதைப் போலும் மாதோட்டமக்களை வருத்தக்கூடியசெயல் பிறிதொன்றுமே இல்லையென்றுதான் தூதன் கூறுகின்றான். இதற்குக்காரணம் மாந்தை வடக்கு அடம்பன்கிராமச்சங்கத்தின் கவலையீனமென்றும் கதைத்துக்கொள்ளுகின்றனர். ஐயோ! சிலவருடகாலமாக அரசினர் ஓர் பிரதமடக்றரை இங்குஅமர்த்தாதபோது அவசியம் ஒருவர் அமர்த்தப்படவேண்டுமெனத் தூதன் உட்படப் பலபெரியோர்கள் வேண்டிநின்றனர். இந்த ஆஸ்பத்திரி விஷயமாகச் சகலருந் திரண்டெழுந்து பணிபுரிவார்களாக!

**"விலாங்கு" போன்றாரின் விஷமம்:** 'விலாங்கு'என்னும் நாமமுள்ள ஓர்சீவபிராணி உண்டு. இது பெரும்பாலும் குளங்களிற்தான் வசிக்கும். இதனைச்சிலர் உணவாகவும் அருந்துவதால் நச்சுத்தன்மையுள்ளதென எவருமே நினைக்கமாட்டார்கள். இதிலும் ஓர்தந்திரம் உண்டுதான். அதாவது பாம்பைக்கண்டால் தலையையும், மீனைக்கண்டால் வாலையும்காட்டித் தந்திரமாகத் தன்காரியத்தை இதுபார்த்துவிடுமாம். இவ்விதமாக மக்களும்சிலர் நடந்து தங்கள்சுயநன்மைக்காக நாட்டை நாசமாக்குவதுடன் அரசினரின்ஸ்தாபனங்களையும், சமய, சாகிய ஸ்தாபனங்களையும் சீர்குலைக்கின்றனர். இத்தகையோர் இப்போது இங்கே மலிந்து பொலிந்து காணப்படுவது பெரியமனவேதனையைத் தருவதாகும். இவர்கள் எப்போது இங்கிருந்துவலசை வாங்குவார்களோ அப்போதே இந்நாடு நன்னாடாகத் திகழும்.

**புருடாச் சங்கங்கள்:** வரண்ட மக்களை இதோ வாழவைக்கிறோமென்று வகைக்குநூறாகப் பலசங்கங்கள் வாலைமுறுக்கிக்கொண்டு எழுந்தன. இவைஆரம்பத்தில், இதோ மணலைக் கயிறாகத்திரிக்கிறோம், வானத்தை வில்லாக வளைக்கிறோம் என வாய்ச்சம்பிரதாயத்தினால் முக்காரம்போட்டு முழங்கிநின்றன. இப்போது அவற்றுள்பல வெண்ணுரைதள்ளி வேகம் குன்றிக் கடைசியாக இருந்தஇடமும் தெரியாதுமறைந்துவிட்டன. இவற்றை ஆக்கிவைத்த கர்த்தாக்களாகிய மேதாவிகளின்புருடாவெல்லாம் இப்போது நாட்டுமக்களுக்கு நன்றாக விளங்கிவிட்டது. "கெட்டிக்காரன் புழுகு எட்டுநாளில்தெரியும்" என்னும் முதுமொழியின்உண்மை இப்போது நேரில்விளங்குகின்றது. சுபம்!

—பாத்திமாபதியிலே பரிசுத்ததேவதாயார் மூன்றுபிள்ளைகளுக்குக் காட்சிகள்அளித்தஇடத்தில் முதன்முதலாகத் திவ்வியபூசை நிறைவேற்றிய குரவரான வண. மனுவேல் பெறெய்ரா டா சில்வாசுவாமியார் தமது 74-ம் வயசிலே சமீபத்தில் காலஞ்செல்லலானார்.

# பிரியாவிடைவிழா

வதிரி—கரவெட்டிக் கட்டளைக்குரவராய், திருஇருதய கல்லூரி அதிபராய் விளங்கியிருந்த வண. A. J. B. அன்ரனைஸ் சுவாமியவர்களின் மாற்றத்தை அறியவந்த வதிரி—கரவெட்டிமக்கள் அவர்ஆற்றிய தொண்டுகளுக்கு நன்றிபாராட்டுமுகமாகச் சென்ற 8-4-51 ஞாயிறுவாரம் காலை 8-30 மணியளவில் பருத்தித்துறை நீதிபதி, மற்றும் பிரமுகர்கள்சமேதராய் நாதசுரவாத்தியவரிசைகளுடன் அவரைக் குருமனையிலிருந்து திருஇருதய கல்லூரிமண்டபத்திற்கு அழைத்துச் சென்றதும், அங்கே பிரிவோபசாரச் சபை செய்தஒழுங்கின்படி யாவும் விமரிசையாக நடைபெற்றன. பருத்தித்துறை நீதிபதிஅவர்களும், வண. பிரியாவிடைநாயகரும் உயர்ஆசனத்தமர்ந்ததும் பிரபலவியாபாரியார் திரு. B. சீமாம்பிள்ளை அவர்கள் பிரியாவிடை நாயகருக்கும், திரு. S. B. குருசாமிப் பிள்ளை அவர்கள் நீதிபதிஅவர்களுக்கும புஷ்பாரங்கள் சூட்டினார்கள். அதன் மேல் நீதிபதியவர்களின் தலைமையிலே விழாஆரம்பமானது. திருமதி. S. மரியாம்பிள்ளை ராசு ஆசிரியையால் பிரியாவிடைப்பாக்கள் படிக்கப்பட்டன. பின்னர் தலைவர் ஆங்கிலத்தில் தமது முகவுரைப்பேச்சை நிகழ்த்தவே திரு. N. அகஸ்ரீன்அவர்கள் தமிழில் அதை மொழிபெயர்த்தனர். நீதிபதி அவர்கள் சுவாமியாரின் அருங்குண விசேஷத்தையும், இவ்வூரின் முன்னேற்றத்துக்காக அவர் எடுத்துக்கொண்ட அயராமுயற்சியையும் எடுத்துக்காட்டி, அவரைப்போல் சமரச மனப்பான்மையுடையோரைக் காண்பது அரிதெனக் கூறிநின்றார்.

பின்னர் பிரபல புத்தகவியாபாரியார் திரு. B. லூக்கேஸ்பிள்ளை அவர்கள் பிரியாவிடைப்பத்திரம் படித்துக் கொடுக்க, ஆசிரியர் P. இராயப்பு அவர்கள் சுவாமியாருக்கு விலையுயர்ந்த காப்பை ஒன்றை அன்பளிப்புச் செய்தார். ஆசிரியை வெலிச்சோர் ஆக்னெஸ், திரு. ஆசிரியர் L. பற்றிக், ஆசிரியர் S. டானியேல் என்பவர்கள் சுவாமியார் ஆற்றியசேவைகளை எடுத்துக்காட்டி அவர் பரலோகமாதாவின்ஆலயத்தை முற்றுப்பெறச்செய்த பெருமையையும், அதன் திறப்புவிழாவைச் செவ்வனே நடத்திமுடித்த திறமையையும் பாராட்டிப்பேசினார்கள். இலங்கைப் பல்கலைக்கழக மாணவரும், அக்கழகத்தின் தமிழ்ச்சங்கத்தலைவருமான திரு. V. மகாலிங்கம்அவர்கள் ஆங்கிலத்தில் நீதிபதிஅவர்களுக்கு நன்றித்துதி கூறினர். பிரிவுபசாரச்சபையின் காரியதரிசியான திரு. N. அகஸ்ரீன்அவர்கள் அங்கு சமுகமளித்த பிரமுகர்களுக்குத் தமிழில் நன்றித்துதி கூறினர்.

கடைசியாகப் பிரியாவிடைநாயகர் எழுந்து நன்றிஉரைகூறிமுடித்ததும் அலங்காரமான ஓர்அன்னவாகனத்திலே அவரை நெல்லியடிக்கு ஊர்வலமாக அழைத்துச்செல்ல, அங்கே லட்சுமிப்படமாளிகையில் திரளான சைவநண்பர்கள் அவரைவரவேற்றுப் புஷ்பாரஞ்சூட்டிநின்றார்கள். திரு. M. கந்தவனம் ஐயா அவர்கள் படமாளிகையில் இணைக்கப்பட்ட ஒலிபரப்பிமுன் சென்று சுவாமியார்செய்த சேவைகளை எடுத்துக்காட்டி, நன்றேசென்று நன்றேவருக என்று பேசிமுடித்தார். திரு. S. மகேசன்ஆசிரியரது பிரியாவிடைப்பேச்சின்பின் அன்னவாகனத்திலே சுவாமியார் மேற்றிராசன மாளிகைக்கு அழைத்துச்செல்லப்பெற்று, ஆசிகூறியதும் விழா இனிதே நிறைவாயிற்று.

வதிரி மைந்தன்.

**திவ்வியபூசையின் மகத்துவம்**

விற்பனைக்குத் தயாராயிருக்கின்றது.

பிரதி விலை ரூபா 2·50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mal. No. 494. Eng.

## அங்கோரின் இடிகரைகள்

இற்றைக்குச் சிலஆண்டுகளாகக் கம்போடியாவின் அடர்ந்தகாடுகள்மத்தியிலே அங்கோரின் இடிகரைகளை றெயின்மூலமாக அல்லது இக்கால மாதிரியான பஸ்கள்மூலமாகப் போய்க் காணக்கூடியதாய் இருக்கிறது.

அங்கோர்வாற்(வாற்என்பதுகோவில்) றும், அங்கோர்ரொம்மும் வளம் பொருந்திய செடிகொடிகளின் மத்தியில் நிறுவிநிற்கின்றன. முதலாவது பெயர்கொண்டதிலே புத்தசமயமும், பிந்தியதிலே பிராமணமும் மூலாதாரமாகக் காணப்படுகின்றன. சிலகாலமாகத் "தேவர்களின் மாளிகை" யென்று அறியப்பட்ட அங்கோர்வாற்என்பது ஓர் சுற்றுச்சாலை அல்லது தூணவரிசையின்மேல் கூரையையும், உட்புறமுற்றத்தையும், கோவிற்கட்டடங்களையும் சிறப்பாகக்கொண்ட ஓர் சேர்க்கையாகும். இந்தக்கட்டடங்கள் ஒன்றின்மேல்ஒன்றாக அமைக்கப்பட்ட சதுரமான மூன்றுமேன்மாடங்களைக் கொண்ட மாதிரியாயும், ஒவ்வோர் மேன்மாடமும் ஒவ்வோர்சுற்றுச்சாலையைக்கொண்டதாயும் இருக்கின்றன. இந்தச்சுற்றுச்சாலைகளின் சுவர்களிலே நடனகாரரையும், புலிகளையும், நாய்களையும், யானைகளையும் வர்ணித்துக் காட்டும் அதிகம்வனப்புவாய்ந்த ஆதாரபிரலம்பசித்திரங்கள் காணப்படுகின்றன.

ஆயினும் சிகரமானது, இராமாயண பாரம்பரைக்கதையின் பிரதிருபத்தைக் காண்பிக்கின்றது. அதிலே சகல குரங்குகளையும் ஆட்சிசெய்வோனுக்கு ஆலோசனைகாரனை அனுமான் என்னும்வானரம் ஓர்பங்குபற்றியிருக்கிறது. பலமுறைகளிலும் புத்தசமயபக்தர்களின்யாத்திரை இன்றைக்குமே அழகுற்றிலங்கும் இந்தக்கோவில்களுக்கு நடைபெறுகின்றது. அங்கே ஓர்காலத்தில் சியநாட்டின் சுலாங்கோன் அரசன் இந்தப்புனிதஸ்தலத்தின் மத்தியிலே ஓர்இரவு தங்கியிருக்கவேண்டுமென்று மூங்கில்கொண்டு அமைக்கப்பட்டஓர்வீட்டைக் கொண்டிருந்தான்.

அங்கோர்ரொம் ஏறக்குறைய 23 மைல் விஸ்தீரணமான பகுதியைஅடக்கியதாய்த் தற்போது ஓர்பகுதிவிழுந்துகிடக்கும் சுவர்ஒன்றாலே முற்றாகச் சுற்றிவளையப்பட்டு, ஒருசிலமாளிகைகளின் இடிகரைகளைத் தன்னுள் அடக்கியிருக்கின்றது. முற்றாக வளம்பொருந்திய கொடிசெடிகளை ஊடறுத்துச் செல்லும்படியாக அரியும் கத்தியைப் பாவனைசெய்யவேண்டியிருக்கிறது. மேலும்இங்கே மிருகங்களின் அழகான பிரதிருபங்களும் கற்பிதமான உருவங்களும் காணப்படுகின்றன.

அங்கோர்வாற்றும், அங்கோர்ரொம்மும் கெமேர்சாதியாரால் கட்டப்பட்டன. இந்தநாட்டினைப் பல நூற்றாண்டுகளாக ஆட்சிசெய்த இந்தப் புராதனமக்கள் மலேரியாவால் வெகுவாக வாட்டப்பட்டார்கள். தற்போது சியமென அறியப்படுகின்ற இந்தநாட்டிற்தானே விஞ்ஞான முறைகளைக் கொண்டு மலேரியாவைஎதிர்த்துப் போராடப்படுகிறது. இரண்டாவது உலகயுத்தம் தொடங்குவதற்கு ஏலவே தானே இதற்கானமுயற்சி தொடக்கப்பட்டது.

அந்தவேளையிலே தற்போதுஇல்லாதொழிந்த சர்வதேசசங்கத்தால் நியமிக்கப்பட்ட மலேரியாநிபுணர்களின் கம்மிற்றியினிடமிருந்து அதிகாரிகள் அதிகமான ஆதரவைப் பெற்றிருந்தார்கள். இந்தமலேரியாநிபுணர்களின்கம்மிற்றி உலகமுழுவதிலும் மலேரியாப் பிரச்சினையை ஆராய்ச்சிசெய்யலாயிற்று. 1938-ம்ஆண்டு வெளியிட்ட அறிக்கைஒன்றிலே, மலேரியாவை எதிர்த்துப் போராடுவதில் குயினைன் மகாவிசேஷப்பட்ட ஓர்பங்குபற்றுகிறதென முடிவுசெய்து மலேரியாக் காலமுழுவதிலும் மலேரியாவராமல் ஓர்பாதுகாப்பாகத் தினமும் 6 கிறேய்ன் குயினைன் பாவித்துவரவேண்டுமென ஆலோசனைகூறியும், இன்னும் ஓர்கால் மலேரியாகாணுமிடத்து 5 முதல் 7 நாட்களுக்குத் தினமும 15 முதல் 20 கிறேய்ன் குயினைன் பாவித்துவரவேண்டுமெனவும்சிபாரிசுபண்ணியிருக்கின்றது.

## சேன் வின்சென்ற் டீ போல் சபை யாழ்ப்பாணம்

### அர்ச். சூசையப்பர் பந்தியின் 1950-ம் ஆண்டுக்கான 43-ம் ஆண்டு அறிக்கைப் பத்திரம்

1950-ம் ஆண்டு மார்கழி மாசம் 31-ந் தேதியோடுமுடிவான 43-ம் வருடத்தின் அறிக்கையையும், வரவு செலவுக்கணக்கையும் எங்கள்உபகாரிகளுக்கும், அபிமானிகளுக்கும் தாழ்மையுடன் சமர்ப்பிக்கின்றோம்.

**காரிய அங்கத்தவர்கள்:** எங்கள் காரியஅங்கத்தவர்களின் இப்போதைய தொகை 23. இவ்வருடம்நடந்த 47 வாராந்தக் கூட்டங்களுக்குச் சராசரி 17 அங்கத்தவர்கள்வீதம் சமுகம் கொடுத்தனர்.

**வரவு செலவுக் கணக்கு:** இவ்வருடமும் எமதுவருமானத்தின் குறைவைக் குறிப்பிடவேண்டியவர்களாய் இருக்கிறோம். சென்றவருட வரவு 3,507 ரூபா 26 சதம். ஆனால், இம்முறையோ 3,091 ரூபா 74 சதம். இயல்புள்ளவர்களாக இருக்கும் அன்பர்களே, உங்கள்ஏழைச்சகோதரர்களை மறந்துபோகாதிருக்கும்படி உங்களைத் தயவாகக் கேட்டுக்கொள்ளுகிறோம. சேர்ந்தபணத்தைக்கொண்டு 104 தனியாட்களைக்கொண்ட 31குடும்பங்களுக்கு வாராந்த உதவியும், 460 தனிப்பட்டோரைக் கொண்ட 125 குடும்பங்களுக்குத் தருணஉதவியும் வழங்கலானோம். அன்றியும் ஒருசிலரின் பிரேதஅடக்கத்திற்கும, சில வறியவர்களின் வீடுகள்வேய்வதற்கும், இன்னுஞ்சிலர் சிறுவியாபாரந் தொடக்கவும், சில வறியபிள்ளைகள் முதல் நன்மை பெற்றுக்கொள்வதற்கு வேண்டிய உடுபுடவைதயாரிக்கவும் உதவி புரியலானோம்.

**ஏழைகளைத் தரிசித்தல்:** எம்மால் உதவிபெறும் இல்லங்களுக்கும், ஞான உதவிகளைத் தேடிநிற்கும் இல்லங்களுக்குஞ் சென்று அவற்றிலுள்ள குடும்பங்களைச்சேர்ந்தோர் புண்ணிய நெறியில் ஒழுகுதற்குப் புத்திமதிகள் கூறியுள்ளோம். எல்லாமாக 2,108 சந்திப்புகள் செய்யப்பட்டன.

**ஞானவேலைகள்:** நோயாளரைச் சந்தித்தல், சிறைப்பட்டோரைத் தரிசித்தல், ஞானோபதேசம் பயிற்றுதல், கத்தோலிக்க இலக்கியங்களைப் பரப்புதல்முதலிய ஞானவேலைகளில் எமது அங்கத்தவர் பங்கெடுத்துவருகின்றனர். ஆஸ்பத்திரிநோயாளிகள் 936 முறை தரிசிக்கப்பட்டனர். மறியற்கூடம் 18 முறை தரிசிக்கப்பட்டது. 520 பத்திரிகைகள் வாசிக்கக் கொடுக்கப்பட்டன.

**இலவச புத்தகசாலை:** கடந்த வருடத்தில் இப்புத்தகசாலையிலிருந்து 110 புத்தகங்களை இரவலாக வாசிக்கக் கொடுத்துள்ளோம். கத்தோலிக்க இலக்கியங்கள்மூலம் சத்தியவேத விசுவாசத்தை மக்களிடையேவளர்க்க இவ்விதமாக முயற்சித்துக் கொண்டு வருகின்றோம்.

**அர்ச். அந்தோனியார் தரும அப்பக் காணிக்கை:** இந்தக்காணிக்கையால் எமக்கு இம்முறை வந்ததொகை 1,980 ரூபா 65 சதம். அர்ச். அந்தோனியாரின்மன்றாட்டால் எங்கள் நண்பர்களில் அநேகர் கேட்டுக்கொண்டநன்மைகளைத் தவறாமல் அடைகின்றார்கள் என்பதற்கு அவர்கள் பிரசுரஞ்செய்வதற்காக அனுப்பும் நன்றியறிந்த ஸ்தோத்திரங்களும், காணிக்கைகளும் சாட்சிபகருகின்றன.

**நத்தார்த் தண்டல்:** இவ்வருடம் நத்தார்த் தண்டலால் 358 ரூபா 55 சதம் சேர்க்கப்பட்டது. இதை மனமுவந்துஉதவிய நண்பர்களுக்கும், பெரியார்களுக்கும் எமது ஆழ்ந்தநன்றியைக் கூறுகின்றோம். இப்பணத்தைக் கொண்டு சிலவறியவர்களுக்கு வஸ்திரங்களும், வயோதிபர்சாலை, மறியல் வீடு என்பவற்றிலுள்ளோர்க்கு நத்தார் உபசாரணையும் அளித்துள்ளோம்.

**அர்ச். வின்சென்ற் டீ போல் திருநாள்:** எமது பாதுகாவலராகிய அர்ச். வின்சென்ற் டீ போலின் திருநாளானது எங்கள் ஆர்ச். சூசையப்பர் கோவிலிலே பூசை பிரசங்கங்களுடன் கொண்டாடப்பட்டது. திவ்வியபூசைக்குச் சமுகமானோரிற் பெரும்பாலோர் திவ்வியநன்மை பெற்றுக்கொண்டனர்.

**முடிவுரை:** ஈற்றில் தமது உதார குணத்துடன் எமக்குப் பணஉதவி செய்து உற்சாகம்கொடுத்துவந்துள்ள மகாவக். யாழ்ப்பாண மேற்றிராணியாண்டவருக்கும், எங்கள் அன்பிற்குரிய தலைவர்சுவாமியவர்களுக்கும், எங்களுக்காக அயராது உழைத்துவரும் வண. கட்டளைச்சுவாமியவர்களுக்கும், எங்களை அன்பாய்க் கண்காணித்துவரும் தனிச்சங்க அக்கிராசனர், காரியதரிசி அவர்களுக்கும், ஏழைகளின் சேவையில் ஈடுபட்டுள்ள எமதுசகோதர பந்தியினருக்கும் எங்கள்மனப்பூர்வமான நன்றியைச் சமர்ப்பிக்கின்றோம். கடைசியாக எம்மையும், எமதுஉபகாரிகளையும், எமதுவறியவர்களையும் அளவில்லா அன்போடு சகல ஆன்மசரீர ஆபத்துக்களிலேநின்று காப்பாற்றிவந்த வல்லமைமிக்க ஆண்டவனுக்கு எமது நன்றியறிந்த ஸ்தோத்திரத்தைச் சமர்ப்பிக்கின்றோம்.

**M. சவிரிமுத்து** அக்கிராசனர் — **S. மரியாம்பிள்ளை** காரியதரிசி

**கவனிப்பு:** இத்தருமசபைக்கு உபகரிக்கும்பொருள் வண. தலைவர்சுவாமி அவர்களால் வந்தனையுடன் ஏற்றுக் கொள்ளப்படும்.

*Adderss :*

Rev. Fr. S. A. Michaelsamy O.M.I.
Director
S. V. P. St. Joseph's Conference
Bishop's House, Jaffna.

### வரவு செலவுக் கணக்கு 1-1-50—31-12-50

**வரவின் விபரம்**

| | ரூ. ச. |
|---|---|
| உபகாரிகளாலும் மகிமை அங்கத்தவர்களாலும் | 553-10 |
| காரிய அங்கத்தவர்களின் வாராந்தக்கூட்டங்களில் | 32-96 |
| அர்ச். அந்தோனியார் தரும அப்பக் காணிக்கையால் | 1,980-65 |
| நத்தார்த் தண்டலால் | 358-55 |
| பிடியரிசியாகச் சேர்க்கப்பட்ட பணம் | 117-00 |
| உண்டியலால் | -53 |
| 1950-ம் ஆண்டு தைமாதம் 1-ந் தேதி கையிருப்பு | 48-95 |
| ஆக மொத்தம் | 3,091-74 |

**செலவின் விபரம்**

| | ரூ. ச. |
|---|---|
| பணமாக உதவியது | 1,525-24 |
| சிறு வியாபாரந் தொடங்க | 5-00 |
| வறியோர்க்கு வஸ்திரமாக | 241-42 |
| வறியவர்களின் வீடு வேய | 30-00 |
| பத்திக்கூட்டங்கள், வயோதிகர்சாலை, மறியல்வீடு என்பவற்றிற்கு நத்தார் உபகரிப்பும், உபசாரணையும் | 383-49 |
| புத்தகம், பத்திரிகை, அச்சுக்கூடப் பில் என்பவற்றிற்கு | 208-25 |
| கல்லூர்மீசாம் வேதப் பரப்புதலுக்காக | 30-00 |
| வயோதிகர் சாலைக்கு | 60-00 |
| உபகாரிகளுக்காகப் பூசை செய்விக்க | 57-00 |
| வறியோரின் பிரேத அடக்கத்திற்கு | 24-00 |
| செபமாலை, முத்திரை, காகித உறை, மற்றும் பிற செலவுகள் | 166-43 |
| எமது உபதேசியார் சம்பளம் | 540-00 |
| வறியபிள்ளைகளுக்குப் புத்தகம்வாங்க | 60-25 |
| 1950-ம் வருடம் மார்கழி மாதம் 31-ந் தேதி கையிருப்பு | 60-66 |
| ஆக மொத்தம் | 3,091-74 |

**M. V. ஆசீர்வாதம்**
தனதிகாரி.

## நீடிய ஆயுளின் விதிகள்

நீடியஆயுளுக்குச் சகலத்திலும் மிதமாயிருப்பது அத்தியாவசியம். நூறுவயதுமட்டும் வாழ்கின்ற ஸ்திரி புருஷர்களின் சரித்திரத்தை நாம் ஆராய்ந்து பார்க்கையில், அவர்கள் எல்லாவிஷயங்களிலும் மிதமாகவேஇருந்திருக்கிறார்களென்று தெரியவருகிறது. அன்னபானத்தில் மிதமாயிருக்க வேண்டியது போலவே, கோபதாபங்களுக்கு இடங்கொடாமல் மனதையும் அடக்கியாளவேண்டும். கோபம், பொறாமை, மாற்சரியம்முதலியன உடம்பைக்கெடுத்து ஆயுளைக்குறைக்கின்றன. அன்புகாரணமாகத் தோன்றும் எண்ணங்களும், போதுமென்றமனமும் மனிதனின் ஆயுளை நீடிக்கச்செய்கின்றன. முக்கியமாக, போசனவேளையில் விசனத்துக்குரிய எண்ணங்களையும், கவலை உண்டுபண்ணத்தக்க சிந்தனைகளையும் ஒழித்துவிட்டு, உடனிருப்பவர்களோடு உல்லாசமாய்ச் சல்லாபித்துக்கொண்டு சந்தோஷமாய்ச்சாப்பிடுவது அவசியம்.

நீடியகாலம் வாழ்ந்திருந்தவர்கள் சாமானிய உணவுகளையே உண்டார்கள். நூற்றுக்குமேலானவயதுள்ள ஒருஅமெரிக்க பெண்பிள்ளையை நோக்கி: "நீர் என்னென்னஉணவுகளை உண்டுவருகிறீர்?" என்று கேட்டதற்கு, அவள் "நான் தானியங்களையும், றொட்டியையும், உருளைக்கிழங்கையுந் தான் உண்டுவருகிறேன்." என்று பதிலுரைத்தாள். சீரியதேசத்திலே 113 வயதுவரை வாழ்ந்த ஒருவன் றொட்டியையும், அத்திப்பழங்களையுமே பெரும்பாலும் உண்டுவந்தான்என்றும், தண்ணீரையும் பாலையுந்தவிர வேறெதையும் பருகவில்லையென்றும் தெரியவருகிறது.

காப்பி, தேநீர் வெகுசொற்பமாகவே உபயோகிக்கலாம். கூடியவரை மதுபானம், புகையிலைமுதலியவற்றை விலக்கிப் பசுமோர், கீரைவகைகள், மரக்கறிவகைகளை அனுதின ஆகாரத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டும். வயதுஏறஏற மாமிசத்தையும், மதுவையும், சத்துள்ளஉணவுகளையும் அதிகமாக உண்ணவேண்டுமென்று சிலர் எண்ணுகிறார்கள். இது தவறு. ஏனெனில், இப்பேர்ப்பட்டஉணவுகள் சீரணக்கருவிகளைக் கெடுப்பதுமல்லாமல், உடம்பிலே விஷபதார்த்தங்கள் கொஞ்சங்கொஞ்சமாய்ச் சேரும்படியும் செய்கின்றன. இந்த விஷபதார்த்தங்களால் ஆயுள்குறைகிறது.

வயதுசென்றவர்கள் மாமிச உணவைக் குறைத்து உண்ணவேண்டும். இவர்கள்அடிக்கடி பழங்களை உண்டுவரவேண்டும். கனிந்தபழங்கள் சொற்பவிலைக்குக் கிடைக்கும்பட்சத்தில் அவைகளைவாங்கி அப்படியே உண்ணலாம். நீராவியில் அல்லது வெந்நீரில் வேகவைத்தபழங்களை உண்பதும் நல்லதே. வயதுமுதிர்ந்தவர்கள் ஜிலேபி, லட்டு, மைசூர்பாக் முதலிய இனியபதார்த்தங்களை உண்ணலாகாது.

நெடுங்காலம் வாழ்வதற்குத் தினந்தோறும் தேகாப்பியாசம் செய்துவருதல் மிகவும்அவசியம். நெடுங்காலம் வாழ்ந்த சிலபெரியமனிதர்கள் தங்கள்

( தொடர்ச்சி 8-ம் பக்கம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் தருமக்கோணம்



சென் வின்சென்ற் டி போல் தரும சபை யாழ்ப்பாணம்

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

நாக்கியம்புலம்:— பரிசுத்த தேவ தாயாரினதும், அர்ச். அந்தோனியாரினதும் வேண்டுதலினால் எனக்கு நேர்ந்த இடையூறில் நின்று நீக்கப்பெற்றேன். இவர்களுடையநாமங்கள் அர்ச்சிக்கப்படுவதாக.

வி. ஏ. நாயகம்

### கேட்டநன்மைகள் அனுகூலமானதினால் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்

மாத்தளை: எஸ். எவ். சீமோன் 2-00— சாவகச்சேரி: லோ. கிறிஸ்தோப்பர் 2-00 — நாவற்குளி: ரி. வில்லியம் 2-00 — முருங்கன்: பி. ஜே. சிறில் 1-00 — கல்கமுவா: ஏ. வஸ்தியாம்பிள்ளை 1-00— கற்பிட்டி: எம். மரியநாயகம் 1-00 — சுண்டிக்குளி: பி. எஸ். ஆர். 2-00 — அம்பிற்றியா: எம். டானியல் 4-00— திரிகோணமலை: எல். மனுவேல் 2-00—றக்குவானை: ஏ. இறப்பியேல் 1-00 — நீர்கொழும்பு: கே. எஸ். மனுவேல் 2-00 — உடப்புசலாவை: எஸ். எம். யோசேப்பு 10-00— குருநாகல்: ஜி. எஸ். சின்னத்துரை 1-00 மடுல்சீமா: ஆர். எம். டி. பண்டா 2-00 —தலவாக்கொலை: எம். எம். அந்தோனிப்பிள்ளை 1-00—நிவெடா: ரி. மனுவல் 2-00 —நீர்கொழும்பு: மேரி லொறு பொர்ணண்டோ 1-00—சூராவத்தை: பி. ஏ. இராசரட்ணம் 4-00—நரக்களி: பி. எஸ். பிள்ளை 2-00 — றம்வொட்டா: எம். எவ். யுவக்கிம் 1-00 — மாம்புரி: எல். அருளம்மா 2-00 — புத்தளம்: ஏ. மரியாம்பிள்ளை 1-00— பசறை: பிலிப் அன்ரனி 1-00— அப்புத்தளை: என். டி. சீமோன் 2-00 — கொழும்பு: ஓர் உபகாரி 10-00—மலாயா: ஏ. ஏ. சாமுவேல் 10-00— மஸ்கேலியா: எம். வஸ்தியாம்பிள்ளை 6-00— பண்டாரவளை: சூசைமரி பீற்றர் 2-50— கேகாலை: ஏ. யோண் 5-00—கொழும்பு: எஸ். எம். யோசேப்பு 3-00—கொற்றகல: எம். இரட்ணம் செபமாலைமரி 2-00 — பாஷையூர்: மூப்பர் லேனு 1-00— புத்தளம்: பி. எம். சந்திரசேகரா 1-00—மடுக்கலை: கே. எஸ். டானியல் 5-00 — மஸ்கேலியா: மேரி கபிரியேல் 1-00 — புத்தளம்: டபிள்யு. எம். பிருன்டோ 4-00 — கொற்றகல: ஜே. ஏ. குரூஸ் 2-00 — காக்காப்பள்ளி: ஆர். எஸ். ஆர். காசிஐயா 5-00—தலவாக்கொலை: ரி. சாமுவேல் 2-00 — யாழ்ப்பாணம்: ஓர் உபகாரி 5-00, ஓர் உபகாரி 2-00 — நனுஓயா: எவ். பி. சாமுவேல் 1-00 — வவுனியா: எஸ். பாக்கியநாதர் 1-00—உடப்புசலாவை: மிசெஸ் எஸ். வி. பீற்றர் 2-00—மூதூர்: க. அ. ஞே. வாஸ் 1-00—கல்கமுவா: வ. சந்தியோகு 1-00 —பீற்றப்பிற்றற: எம். மரியாம்பிள்ளை 1-00— கல்கமுவா: அ. மரியானுள் 1-50 —முந்தல்: மா. அந்தோனிப்பிள்ளை 2-00 —கல்கமுவா: பி. டி. எமிலியானுஸ் 1-00 —இற்ருலை: மிசெஸ் டி. ஜி. அன்ரன் 1-50 — அச்சுவேலி: பி. எஸ். 2-00 — சூராவத்தை: எம். ஏ. -50— மாருவில்: பிருங் அன்ரன் 13-00—கல்கமுவா: சீ மரியாம்பிள்ளை 2-50, ச: கிறகோரிஸ் 1-00—மட்டக்களப்பு: எஸ். ஜே. டேவிற்பிள்ளை 1-00 —- பசறை: பிலிப் அந்தோனி 3-00 — மாம்புரி: வ. சவிரிப்பிள்ளை 1-00— கல்கமுவா: எம். எஸ். அந்தோனி 1-00 — கொழும்பு: பி. ஜே. சலமோன் 2-00 — கல்கமுவா: சீ. செபஸ்தியாம்பிள்ளை -50 — கரவெட்டி: எஸ். பஸ்ரியாம்பிள்ளை 1-00, பி. கபிரிகேற்பிள்ளை 1-00— இளவாலை: எம். ஜே. மரியாம்பிள்ளை 2-00— கொள்ளுப்பிட்டி: தொம்மானுப்பிள்ளை 2-00 — கற்பிட்டி: என். பொனிப்பாஸ் 2-00 — பாஷையூர்: தவிது பறுனாந்து 2-00 — மயிலங்காடு: அ. சந்தியாப்பிள்ளை 1-50 — மடுல்சீனு: ஜோட்ஸ் மார்க்கு 7-00— வெலிப்பனை: ஏ. ஆர். ரிம்போத்தி 3-00 — மாத்தளை: எஸ். எவ். சீமோன் 2-00—கம்பளை: மிசெஸ். ஏ. டி. சேவியர் 3-00— மூதூர்: கே. ஏ. ஞேசு டி வாஸ் 2-50 — நீர்கொழும்பு: கே. எஸ். மனுவல் அன்ரனி 1-00 — முந்தல்: பி. பேதுரு பொர்ணண்டோ 2-00 — யாழ்ப்பாணம்: ம. விசேந்தி 1-00 — உடப்புசலாவை: எஸ். எம். யோசேப்பு 10-00— குருநாகல்: ஜி. எஸ். சின்னத்துரை 1-00 —மன்னார்: எஸ். எஸ். கொடிதோர் 5-00 — கொழும்பு: மிசெஸ் எஸ். பிரான்சீஸ் 5-00— முள்ளிக்குளம்: சாமிநாதன் இராசமணி 2-00—அம்பிற்றியா: மிசெஸ் பி. ஏ. மாட்டீன் 1-00 — கேகாலை: டி. ஞேச் 5-00 — கொச்சிக்கடை: பி. பி. இராசமணிநாட்டார் 30-00— கொழும்பு: அ. மரியான் 2-00, எஸ். எம். யோசேப்பு 3-00—கல்கமுவா: யூ. ஆவிசாப்பிள்ளை -60— நாவற்காடு: தா. ஜோண் 2-00— வேப்பங்குளம்: பே. பறுனாந்து 2-00— நீர்கொழும்பு: மேரி லோறு பொர்ணண்டோ 2-00—மஸ்கேலியா: பி. கபிரியேல் 1-00—பசறை: கதிரவேலு 5-00—நமுனகல: எவ். பி. சாமுவேல் 1-00 — எத்தாலை: டபிள்யு. எம். பொர்ணண்டோ 2-00 —றக்குவானை: ஏ. ஏ. இராசரட்ணம் 1-00 —நிவெடா: ரி. மனுவேல் 2-00—அக்கரபற்றன: எல். ஏ. எஸ். தோமஸ் 2-00— முருங்கன்: எல். அருளம்மா 1-00—அப்புத்தளை: என். டி. எஸ். பிரான்சீஸ் 2-00 — நீர்கொழும்பு: எஸ். ஏ. குரூஸ் 3-00— மஸ்கேலியா: டபிள்யு. செபஸ்தியம்மாள் 5-00—கல்இல்லா: ஏ. எல். சைமன் 4-00 — நாவற்காடு: வ. மனுவல் -50— கல்கமுவா: வ. சந்தியோகு 1-00— உடப்புசலாவை: மிசெஸ் எஸ். வி. பீற்றர் 1-00— றக்குவானை: எம். ஜே. பெறேரா 1-00.

| | |
|---|---|
| The Director, St. Joseph's Conference Bishop's House. JAFFNA. | சென் வின்சென்ற் டி போல்சபைத்தலைவர் மேற்றிராசன மாளிகை யாழ்ப்பாணம். |

## நாளு சங்கதிகள்

—கனடாதேசமொண்றியல்நகரிலே திரு. யோசெவ் சென்டெனிஸ் என்பவருக்குப் பிறந்த இருபத்தைந்தாவது பிள்ளைக்குச் சமீபத்திலே அந்நகர் அதிமேற்றிராணியாரான லெஜர்ஆண்டவர் ஞானஸ்நானம் அருளலாயினர். திரு. சென்டெனிசும், அவர்பாரியாரும் தற்போது முறையே 52—47 வயசுடையவர்கள், 30 வருடங்களுக்கு முன் விவாகஞ்செய்துகொண்டார்கள்.

—இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், மலாய்நாடு, பர்மாஆதியாம் நாடுகளைச்சந்தித்துப்போன பாத்திமாநாயகியின் அற்புத திருச்சுரூபம் தற்போது ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பிரயாணஞ்செய்துவருகிறது. பின்னர் அங்கிருந்தும் அது போர்த்துக்கேயரிமோர், இந்தோனேஷியா, நியூகினியா ஆதியவற்றிலே பிரயாணஞ்செய்துவரும.

—ஒல்லாந்திலே கத்தோலிக்க சனகட்சியின் தலைவரான டக்றர் காள்றாம் அவர்கள் அந்நாட்டின் பிரதமராகிச் சமீபத்தில் ஆக்கியுள்ள மந்திரிசபையில் ஆறுகத்தோலிக்கர் மந்திரிமார்பதவி வகித்திருக்கின்றனர். 100 அங்கத்தவரைக்கொண்ட அந்நாட்டின் அரசாங்க கீழ்சபையில் 32 கத்தோலிக்கரும், 50 அங்கத்தவரைக்கொண்ட மேல்சபையில் 17 கத்தோலிக்கரும் இருந்துவருகிறார்கள்.

—வடஅத்திலாந்திக் உடன்படிக்கைச்சேனைக்கென்று புதியஅமெரிக்க போர்வீரர்களை அடுத்த இரு மாசங்களுக்கிடையில் அனுப்பிவைப்பதற்கான திட்டங்களை அமெரிக்க அரசாங்கம்செய்துமுடித்திருக்கிறது. திரு. ட்றூமன்பிரசாதிபதியும், அவரின் இராணுவதலைவர்களும் ஐரோப்பாவில் நிறுத்த எண்ணியிருக்கும் நான்கு படைவகுப்புகளுக்கென்று அனுப்பப்படவிருப்பாருள் இவர்களே முதன் முதலாகப் போகிறவர்கள்.

—ஒன்பதுவயதுக்குட்பட்ட 5,000 இத்தாலிய அனாதபிள்ளைகளை அமெரிக்கஐக்கியதேசத்தில் கொண்டுபோய்க் குடியேற்றுவதற்கான ஏற்பாடுகளைப் பாப்பரசின் கஷ்டநிவாரண கம்மிஷன் செய்திருக்கிறது. இப்பிள்ளைகளில் அநேகர் அத்தேசத்திலுள்ள தங்கள் இனசனருடன் சேர்ந்துகொள்வார்கள். ஏனையோரை அநேகஅமெரிக்க குடும்பங்கள் சுவீகரித்துக்கொள்ளவிருக்கின்றன.

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

இல. 5332

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு

வேலணைமேற்கு சதாசிவம்பிள்ளை மகாலிங்கம் வழக்காளி.

1. வேலணைமேற்கு முத்துகணபதி சின்னத்தம்பியும் பெண்
2. ஷை வள்ளியம்மையும்
3. வண்ணார்பண்ணைகிழக்கு சேனாதிராசாவும் பெண்
4. ஷை சிவஞானம்மாவும்

எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு 5332-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1951-ம் ஆண்டு வைகாசிமாதம் 5-ந்திகதி சனிக்கிழமைமுற்பகல் 11 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை ரூபா 1810. இதில் ரூபா 1300-க்கு 23-3-1949 தொடக்கம் 30-5-49 வரைக்கும் வருடமொன்றுக்கு ஒன்பதுவீதவட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் 30-5-1949 தொடக்கம் கொடுக்கும்வரைக்கும் 5 வீத வட்டியும் செலவு ரூபா 186-68. இதில் ரூபா 125 கொடுபட்டது.

காணி விபரம்:

தீவுப்பகுதி வேலணை மேற்கிறை குஞ்சிக்கலட்டி. நிலைப்பரப்பு 5 குளி $16\frac{1}{2}$. எல்லை, கிழக்கு: செல்லையாமகள் இராசலட்சுமி, வடக்கு: ஐயனார்கோவிலாதனம், மேற்கு: வேலுப்பிள்ளை தருமலிங்கம், தெற்கு: சங்கத்தார் கேணி வயிரவகோயிலாதனம். இதடங்கலும் தெற்கெல்லைக்காணியில் இருக்கிற கிணற்றில் தண்ணீர்ப்பங்கும், வழிவாய்க்கால் பாவிப்புரித்துமதைச்சேர்ந்தவைகளும்.

ஆ. சு. கந்தையா
A. S. Kandiah
காரைநகர், 28-3-51. கொம்மிஷனர்

## நீடிய ஆயுளின் விதிகள்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுட்காலமுழுவதும் நாள்தோறும் தேகாப்பியாசம் செய்யும்வழக்கத்தைக் கையாண்டுவந்தனர். மூப்புமேலிட்ட பிறகுங்கூட நல்லகாற்றிலே உலாவி வரும்வழக்கத்தை அவர்கள் கைவிடவில்லை. அடிக்கடி நீண்ட மூச்சு விடு. இது உன்சுவாசாசயத்தைப் (நுரையீரல்கள்) பலப்படுத்துவதுடன் இரத்தத்தையும் சுத்தஞ்செய்யும். எப்பொழுதும் நிமிர்ந்துநட. நேரேபார்த்து நிமிர்ந்துநடந்தால் கூன் முதலிய அங்கப்பழுது நேரிடாது.

தினந்தோறும் ஸ்நானம் செய்யவேண்டும். வெந்நீரில் ஸ்நானம் பண்ணுவதாயின் மிதமிஞ்சிய சூடான சலம்ஆகாது. நீ ஸ்நானம்பண்ணத் தொடங்குமுன் இருந்ததைவிட ஸ்நானத்திற்குப்பின் அதிக தெம்புடனும், உற்சாகத்துடனும் இருத்தல்வேண்டும். அதற்குமாறாக ஸ்நானத்திற்குப் பிறகு உனக்குச் சிறிதுஆயாசமும், அசதியும் தோன்றுமாயின் அது சுகாதாரமுறைக்குப் பொருந்திய ஸ்நானமல்லவென்பது நிச்சயம்.

தினந்தோறும் இரவில் பத்துமணிக்குமுன் படுக்கைக்குப் போகவேண்டும். உடம்புக்கு அப்பியாசம் கொடுத்துவருவதுபோலவே மனதுக்கும் அப்பியாசம் கொடுத்துவரவேண்டும். வயதுசென்றவர்கள் இதைச் செய்துவந்தால், விருத்தாப்பியத்தில் அநேகருக்குஏற்படுகிற சிறுபிள்ளைத்தனம் இல்லாமற்போகும்.

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

இல. 6290

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு

1. காரம்பன், (இப்போ கொழும்பு) ரி. விசுவலிங்கமும் பெண்
2. ஷை இராசலட்சுமியும்

வழக்காளிகள்.

சரவணை இலங்கைநாதர் பாலசுப்பிரமணியம் எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு 6290-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணிகள் 1951-ம் ஆண்டு வைகாசிமாதம் 11-ந்திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை ரூபா 1155. இதில் ரூபா 875-க்கு 12-1-50 தொடக்கம் 26-5-50 வரைக்கும் வருடமொன்றுக்கு நூற்றுக்குப் பன்னிரண்டு வீத வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் 26-5-50 தொடக்கம் கொடுக்கும்வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 190-65.

காணிகளின் விபரம்:

1. ஊர்காவற்றுறை கோயிற்பற்று சரவணை இறை பீக்குளிவயல் கேணிக்கரை வெள்ளடை கேணிக்கரை தெற்குக் கலட்டியும், இயங்கன்கலடும். நெற்பரப்பு $18\frac{3}{4}$. எல்லை, கிழக்கு: பளனி நாகனாதரின் உரிமைக்காரரும் பங்காளரும், வடக்கு: பளனி நாகனாதர்பெண் சுந்தரி அம்மாவும் பங்காளரும், மேற்கு: கேணியும் நாகலிங்கம் கைம்பெண் சிவபாக்கியமும், தெற்கு: முத்தி கந்தையா. இதடங்கலிற் சொரியலாய் அரைவாசி.

2. சரவணைஇறை யாளிவரவையும், யாளிவரவைக்கலடும். நெற்பரப்பு 10-ம், கிணற்றில் அரைவாசியும், தென்னைகள், பனைகள், செய்பயிர், வான்பயிர்களும். எல்லை, கிழக்கு: வாய்க்காலும் காசிப்பிள்ளை சுப்பிரமணியமும், வடக்கு: வேலுப்பிள்ளை பெண் சின்னத்தங்கம், மேற்கு: காசிப்பிள்ளை மகள் முத்தாச்சி, தெற்கு: வயித்திலிங்கம்பெண் தங்கம்மாவின் உரிமைக்காரர். இதடங்கலும் வேலுப்பிள்ளை சின்னத்தங்கத்துக்குரிய வடக்கெல்லையில் இருக்கிற, கிழக்கெல்லைப்பக்கமாக இக்காணியில் இருந்து வடக்குஒழுங்கைக்குப் போக்குவரவுசெய்யும் நாலுமுழ அகலங் கொண்ட ஒழுங்கையும்.

ஆ. ச. கந்தையா
A. S. Kandiah
காரைநகர், 4-4-51. கொம்மிஷனர்

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

தத்துவவழக்கு. இல. 1148

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு

நாரந்தனை, காலஞ்சென்ற அவுருன் லாசறுவினது ஆதனத்துக்குத் தத்துவம் மாணித்தவர்.

நாரந்தனை அவுருன் லாசறு கைம்பெண் ஆஞசி தத்துவகாரி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு 1148-ம் இலக்க வழக்கில், எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படுந் துண்டுக்காணிகள் 1951-ம் ஆண்டு வைகாசிமாதம் 12-ந்திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

காணிகளின் விபரம்:

1. நாரந்தனை இறை முட்டன் கலடு. நிலைப்பரப்பு 22. எல்லை, கிழக்கு: ஒழுங்கை, வடக்கு: பிருஞ்சிப்பிள்ளை கயித்தோப்பிள்ளை, மேற்கு: சந்தியாப்பிள்ளை பெண் ஆனையிமுத்து, தெற்கு: அவுருன் சவிரிமுத்து. இதில் சொரியலாய் அரைவாசி.

2. நாரந்தனை இறை மருக்கன்னூரி. நிலைப்பரப்பு 44. எல்லை, கிழக்கு: வேலுப்பிள்ளை முருகுப்பிள்ளை, வடக்கு: வேலுப்பிள்ளை முருகுப்பிள்ளையும் பங்காளரும், மேற்கு: வெறும்நிலம், தெற்கு: நாகன் சின்னப்பொடியனும் இன்னொருவரும். இந்த எல்லைக்குட்பட்ட காணியடங்கலிற் சொரியலாய் நிலைப்பரப்பு 14.

ஆ. ச. கந்தையா
A. S. Kandiah
காரைநகர், 4-4-51. கொம்மிஷனர்

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, April 12 1951.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org